When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது
என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத ஞூ வைகாசி மீ 21 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 10 (04-06-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:103

## ஆறாவது அரசமைப்புத் திருத்த நீக்கம்:

# ஈரோஸ் கொண்டு வருவதையே அரசு விரும்புகிறதாம்!

## நாடாளுமன்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்த உறுதி அளிப்பு

கொழும்பு, ஜூன் 4

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான சட்ட மூலத்தை தனிநபர் பிரேரணையாக ஈரோஸ் எம். பிக்கள் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதையே அரச தரப்பு விரும்புகிறதாம்.

எனினும், அப்படிக் கொண்டு வரப்பட்டால் அந்தப் பிரேரணை மீதான விவாதத்தைக் காலதாமதம் ஏற்படுத்தாமல் நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு சகலவிதமான ஒத்துழைப்பையும் அரச தரப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு விரைவில் கொண்டு வருவதாக இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு உறுதியளித்திருப்பது தெரிந்ததே.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டு, அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்காமல் போனால் அது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என அரச தரப்பில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றதாம்.

ஆகவே, இந்தச் சட்டமூலத்தை ஈரோஸின் அரசியற் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரச தரப்பில் கோரப்பட்டிருப்பதாகவும் —

அப்படிச் சமர்ப்பிக்கப்பட்டால்] அதனை விரைவில் விவாதத்துக்கு எடுக்கக்கூடியதான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் — அறிய வரு

[7ஆம் பக்கம் பார்க்க]

## பாகிஸ்தான் ஓரடி பாய்ந்தால் இந்தியா இரண்டடி பாயும்

### இப்படிச் சொல்கிறார் வி. பி. சிங்

கோலாலம்பூர், ஜூன் 4

பாகிஸ்தான் ஓர் அடி பாய்ந்தால் இந்தியா இரண்டு அடி பாயும்.

இப்படி பிரதமர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் தெரிவித்தார்.

பஞ்சாப்பிலும் ஜம்மு-காஷ்மீரிலும் பிரிவினைவாதத்தை தூண்டும் வேலைகளை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து இந்தியாவில் பிரிவினைவாதத்தை பாகிஸ்தான் தூண்டுமானால் இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ள துரித நடவடிக்கை எடுக்க நேரிடும்.

இந்தியாவில் பிரிவினைவாதத்தை தூண்டும் வேலைகளில் சீனா இறங்கவில்லை என்று நாம் நம்புகின்றோம்- என்று திரு. சிங் சொன்னார். (ஒ-எ)

## அச்சுவேலியில் வெள்ளியன்று போராளிகள் நினைவு தினம்

அச்சுவேலி, ஜூன் 4

வீரமரணமடைந்த போராளிகள் நினைவு தினம் அச்சுவேலியில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகின்றது.

அச்சுவேலி - புத்தூர் கிராமாட்சி மன்றப் பகுதியில் இருந்து வீரவேங்கைகளாகச் சேர்ந்து வீரமரணமடைந்த போராளிகள் நினைவாக ''போராளிகள் தினம்'' அச்சுவேலி பஸ் நிலையத்தில் கொண்டாடப்படுகின்றது.

போராளிகள் தினம் தொடர்பாக அச்சுவேலி பஸ் நிலையத்தில் அன்று பிற்பகல் பொதுக் கூட்டமும் நடைபெறும். அத்துடன் வீரவேங்கைகள் நினைவு தொடர்பாக அச்சுவேலியில் நிறுவப்பட்ட நினைவுச் சின்னங்களும் திறந்து வைக்கப்படவுள்ளன. (ஒ-11)

## காஷ்மீர் பி.பி.சி. செய்தியாளர் நேற்று விடுவிக்கப்பட்டார்

### இந். இராணுவம் கடத்தியது என அவர் தகவல்

ஸ்ரீநகர், ஜூன் 4

நேற்று முன்தினம் கடத்தப்பட்ட பி.பி.சி யின் காஷ்மீர் செய்தியாளர் யூசுப் ஜமீல் நேற்று விடுவிக்கப்பட்டார்.

தன்னை இந்திய இராணுவ வீரர்களே கடத்திச் சென்றனர் என்று ஜமீல் விடுதலையான பின்னர் சொன்னார்.

ஸ்ரீநகரில் உள்ள தனது வீட்டில் இருந்து தன்னைக் கைது செய்து பல இராணுவ முகாம்களுக்கு அவர்கள் கொண்டு சென்றனர் என்றும் ஜமீல் சொன்னார்..

கண்களைக் கட்டிவிட்டு தன்னை இராணுவ வீரர்கள் விசாரணை செய்தனர் என்றும் அவர் சொன்னார்.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு கனிஷ்ட

[7ஆம் பக்கம் பார்க்க]

## வலிகாமம் பகுதியில் கொலையுண்டோர் விவர பட்டியல் தயாராகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 4

வலிகாமம் பகுதியில் மாற்று இயக்கத்தினரால் கொலையுண்டவர்களின் விவரம் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுகின்து.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகமே இந்த விவரங்களைச் சேகரித்து வருகிறது.

இப்பகுதியில் கடந்த காலங்களில் மாற்று இயக்கங்களினால் கொல்லப்பட்டவர்களின் விவரங்களை இன்று முதல் கோண்டாவிலில் உள்ள தலைமைச் செயலகத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## 8 ஆயிரம் "ஸ்டிக்கர்கள்" தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூன் 4

தமிழ் தீவிரவாதக் குழு ஒன்றுக்காக இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டதாகக் கருதப்படும் சுமார் 8ஆயிரம் 'ஸ்டிக்கர்'களை சுங்கப் பகுதியினர் தடுத்து வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக சுங்கப் பகுதியினர் பாதுகாப்பு வட்டாரங்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ)

## பாக். படையினர் சூடு; இந்திய வீரர் இருவர் பலி

ஜம்மு - காஷ்மீர் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியத் துருப்புக்கள் மீது பாகிஸ்தான் படையினர் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதில் இரண்டு இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## மட்டக்களப்பில் இன்று புலிகள்-ஹமீத் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 4

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரும் அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத்தும் இன்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் பற்றி விடுதலைப் புலிகள் பிராந்திய தலைவர்களுடன் ஆராய்வார்கள்.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரே அமைச்சர் ஹமீத்துடன் இன்று மட்டக்களப்புக்குச் செல்லவிருக்கின்றனர்.

மட்டக்களப்பில் இன்று காலையில் பேச்சுகள் முடிவுற்ற கையோடு திரு. யோகி, டாக்டர் பாலசிங்கம் ஆகியோர் அங்கிருந்து விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணம் திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## இந்தியாவில் எய்ட்ஸ் நோய் வேகம்; அதனால் இலங்கைக்கு பேராபத்து

### மருத்துவ வட்டாரங்கள் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 4

இந்தியாவில் விரைவாகப் பரவிவரும் ''எய்ட்ஸ்'' நோயினால் இலங்கையும் கடுமையாயாகப் பாதிக்கப்படலாம் என கொழும்பு மருத்துவ வட்டாரங்கள் எச்சரிக்கை வெளியிட்டிருக்கின்றன.

இந்தியாவில் ''எய்ட்ஸ்'' நோய் விரைவாகப் பரவி வருகிறது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய அரசு போதிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆபிரிக்க நாடுகளுக்கு அடுத்து இந்தியாவில் ''எய்ட்ஸ்'' நோய் வேகமாக பரவி வருகிறது.

பம்பாய் மாவட்டப் பகுதியில் மட்டும் ஒருலட்சம் விலைமாதர்கள் இருப்பதாகவும் -

அவர்களில் 40 வீதமானோர் ''எய்ட்ஸ்'' தொற்றுக்கு ஆளாகியிருப்பதாகவும்-

இவர்கள் ஒவ்வருவரும் சராசரியாக நான்கு ஆடவர்களு

[7ஆம் பக்கம் பார்க்க]

## கடந்த வருடம் இடம்பெற்ற புத்தூர் படுகொலைகளை கண்டித்து நாளை கூட்டம்

அச்சுவேலி, ஜூன் 4

கடந்த வருடம் புத்தூர் கிழக்கு கண்டிக்காடு கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்ட இரண்டாண்டு நினைவாக நாளை 5-ம் திகதி மாலை கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் இதே தினத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த 8 பேர் தீயிட்டு எரிக்கப்பட்டு, கொலைசெய்யப்பட்டனர், வீடுகள் பலவும் எரித்து நாசமாக்கப்பட்டன.

இந்த சோக நாளை நினைவு கூருமுகமாக நாளை செவ்வாய்க்கிழமை மாலை புத்தூர் கிழக்கு தகரப் பிள்ளையார் கோவிலடியில் இக்கூட்

[7ஆம் பக்கம் பார்க்க]

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்:

## ஐ. தே. கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூட்டணி

கொழும்பு, ஜூன் 4

மிகவிரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது ஆளும் கட்சியான ஐ.தே கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஓர் அணியின் கீழ் போட்டியிட வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட ஐந்து எதிர்க்கட்சிகளுக்கு இடையே இணக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

ஸ்ரீ.ல.சு. கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள்கட்சி (விஜேபிரிவு). தேச விடுதலைக்கட்சி, ஆகிய ஐந்து கட்சிகளுக்கும் இடையிலேயே இணக்கம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

வெளிநாடு சென்றிருக்கும் சுதந்திரக்கட்சித் தலைவி

[7ஆம் பக்கம் பார்க்க]

## தொலைபேசி இணைப்புக்கான வேலை யாழ். நகரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன்.4

யாழ்.நகருக்கு 500 தொலைபேசி இணைப்புக்கள் வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

இதன் முதல் கட்டமாக சுமார் 600 தொலைபேசி இணைப்புக்களை வழங்கக்கூடிய 1200 வயர்கள் அடங்கிய கேபிள்களை நிலத்துக்கு

(7 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



இந்தியத் தொல்லை இந்த ரூபத்திலையும் வருகுது எண்டு சொல்லுங்கோ......!

### சுப நேரம்

04-6-90

திங்கட்கிழமை வைகாசி 21

சுபநேரம்:

11.52 - 1.22

இராகுகாலம்

7.22 - 8.52

### ஜி.சி.ஈ. உயர்தர- சாதாரணதர மாணவருக்கு

## பாடசாலைகளில் விசேஷ வகுப்பு

## இணுவிலில் பரீட்சார்த்த நடைமுறை

ஜி.சி.ஈ. சாதாரண தரம், ஜி.சி.ஈ. உயர்தரம் ஆகிய பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் பாடசாலைகளில் வைத்து விசேஷ வகுப்புகள் நடத்தும் பரீட்சார்த்த முயற்சி ஒன்று யாழ். கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த பரீட்சார்த்த முயற்சி இணுவில் பகுதிப் பாடசாலைகளில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும்.

இதன்படி அந்த பாடசாலையில் கல்வி கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டும், அந்த பகுதியில் வசிக்கும் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டும் ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு விசேட வகுப்புகள் நடத்தப்படும்.

பாடசாலை நாட்களில் பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரையும் சனி ஞாயிறு ஆகிய நாட்களில் நாள் முழுவதும் விசேஷ வகுப்புகள் நடைபெறும்.

இந்த பரீட்சார்த்த திட்டம் வெற்றி பெறும் பட்சத்தில் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். (இ-9)

சுன்னாகத்தில் இன்று
மங்களகரமான திறப்பு விழா

இன்று [04 - 06 1990] திங்கட்கிழமை
காலை 9.45 க்கும் 10.45 க்குமிடையேயுள்ள
சுபவேளையில்
மங்களகரமாக திறந்துவைக்கப்படவுள்ளது

நீதினி Q
NIETHINI

பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
★ தமிழ் - ஆங்கில தட்டச்சு
★ றோணியோ ஸ்டென்சில் கட்டிங்
★ சேவைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்;
★ நீதினி Q ★
[3681]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

### தேவை

30 40 வயதிற்கிடைப்பட்ட ஆண் காசாளர் இருவரும் 25-35 வயதுகிடைப்பட்ட ஆண்/பெண் கணக்காளர் இருவரும் அனுபவம் வாய்ந்த சமையல்காரர் மூவரும் பரிமாறுவோர் மூவரும் தேவை பழக விரும்புவோரும் தேவை தொடர்பு: கிறில் சைனீஸ் இன், 181, பலாலிறோட், கோண்டாவில். (3756)

யாழ். சித்திரகலா நிறுவனம் தயாரிக்க இருக்கும் வீடியோ திரைப்படத்திற்கு ஆண்/பெண் நடிகர்கள், படப்பிடிப்பாளர், ஒப்பனையாளர் இணைத் தயாரிப்பாளர் தேவை. தபாலில் விண்ணப்பிக்கவும். ப. ஸ்ரீபதி செயலாளர், யாழ். சித்திரக்கலா நிறுவனம், விக்னேஸ்வரா ஒழுங்கை, இணுவில் தெற்கு இணுவில். (3757)

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது: 200 கிறாம் டின் ரூ 150. 00 தேவைக்கு: பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

2சிறி ஒஸ்டின் A-35 பசன்சர் ஸ்டேசன் வக்கன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V. மகேந்திரன் 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (13324)

Typewriters: புதிய தமிழ் ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [Samy & Co Shabra அருகாமையில்] (C/4643)

### காணி விற்பனைக்கு

நல்லூர் செம்மணி வீதி ஓரம் கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக தென்னைகள், மாக்கள் உள்ளடக்கிய 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல. 712 C/O உதயன். (3746)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

கறுப்பு (வரி) (பிலிமத்) சேவல்குஞ்சுகள் வான்கோழிக் குஞ்சுகள் 5- 6- 90, 6- 6- 90 திகதிகளில் விநியோகிக்கப் படும். இல-9 கந்தையா ஒழுங்கை சுன்னாகம் [புகையிரத நிலையத்துக்கு அருகில்] (3754)

### சேவை

தெளிவான பிழைகளற்ற றோணியோ தட்டச்சு வேலைகள் மிகச் சிறந்த நுட்பத்துடன் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும். Bond Book Stall 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/4668)

### வகுப்புக்கள்

ஆங்கில, தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து வகுப்புக்கள் வார நாட்களிலும் உத்தியோகத்தர்களுக்காக வார இறுதி நாட்களிலும் 3- 6- 90 முதல் ஆரம்பமாகின்றன. Pitman (London) பரீட்சைகளும் நடாத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ்களும் வழங்கப்படும் Bond Institutes 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C/4669]

### WANTED

Wanted an R.M.P. for a Dispensary at Kaithady. to Reside a Retired Person without any Encumbarances Prefered Apply within a Week No. 136, C/o, Uthayan, Jaffna, (13333)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம் எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரகதோஷம், முதலான மாந்திரீக விடயங்கட்கும் நாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, [யாழ்/ இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக] யாழ்ப்பாணம். வியாழக்கிழமை விடுமுறை [3751]

### போட்டோஸ்ரட்

உங்கள் தேவைக்கேற்ப சிறியதை பெரிதாக்கியும் பெரியதை சிறிதாக்கியும் கொடுப்பதில் தரமான பிரதிகளை வேண்டிய அளவுகளில் ஒரு நிமிடத்தில் செய்து கொள்ள நாடுங்கள் பிக்பென்ஸ் "B", கண்டிவீதி, கிளிநொச்சி சிங்கர் சொப் பனி முன்பாக. (13184)

### வாடகைக்கு

சிங்கப்பூர், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செற் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு ராசி சில்க்ஸ் 70, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். [சி/4559]

### தவறிவிட்டது

யமகா றேசிங் மோட்டார் சைக்கிளின் பின் பக்க சிவப்பும் வெள்ளையும் சேர்ந்த மூடி தவறிவிட்டது. Lucky, Strike என எழுதப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் திருக்குமார் கல்வளைவிலலா, கல்வளை, சண்டிலிப்பாய் என்ற முகவரியில சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (பண்டத்தரிப்பிற்கும் சண்டிலிப்பாயிற்கும் இடையில் தவறியது) (3755)

# கல்வியைத் தொடர முடியாது வெளிநாடுகளில் அலைகின்றனர்

## தமிழ் மாணவர் நிலை குறித்து கல்விப்பணிப்பாளர் கவலை

பச்சிலைப்பள்ளி ஜூன் 4 கடந்த ஆறு ஆண்டுகளில் எம் மண்ணில் நிகழ்ந்த அசம்பாவிதங்களால் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாமல் அந்நிய நாடுகளில் அகதிகளாக அலைவது பெரும் வேதனைக்குரியது. ஆயினும் நாம் கல்வி, கேள்வி, இறைபக்தியில் முழுமை பெற்றிருப்பதால் எச்சத்தியாலும் எம்மை அழிக்க முடியாமல் போயிற்று.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வடமாநில கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபரும் சாவகச்சேரி தெற்கு கொத்தணி அதிபருமான கே. எஸ். குகதாசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதிய தென்மராட்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. தனஞ்சயன் பேசுகையில் கல்விக்கூடங்கள் அனைத்தும் பிரதான வீதிகளை அண்மித்திருப்பதால் பாடசாலை ஆரம்பிக்கும், முடிவுறும் நேரங்களில் மாணவர்களுக்கு விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க வாகனப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்றார்.

கல்லூரியின் முன்னாள் அதிபர்களான க. மகேசஸ்வரன் பூ. வெற்றிவேலு, கனிஷ்ட அதிபர் வை. கயிலேஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினர். விழாவின் முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ப-117)

### SLAS

பரீட்சைக்குரிய நூல்கள்-
- நுண்ணறிவு (IQ)
- பொதுஉளச்சார்பும் பொது அறிவும்
- கிரகித்தல்
- பொதுக்கட்டுரைகள் (பொதுவினாத்தாள்)
- விடய ஆய்வு (இது 10 6. 90 இல் வெளிவரும்)

க.குணராசா, MA, SLAS,
ஸ்ரீ லங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (3803)

### மெதடிஸ்த திருச்சபை

வடக்குக் கிழக்கு மாகாண மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் செங்கலடி மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறும். (இ-121)

### யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

02- 06- 1990 இல் நடைபெற்ற

### அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் பரிசுக்குத் தெரிவானோர்

1 ஆம் பரிசு 14034 ஆ. டக்ளஸ்
புனித சூசையப்பர் ஆலயம், வட்டக்கச்சி.

2 ஆம் பரிசு 2024 அ. சர்வாஜினி
பெரியவிளான், இளவாலை.

3 ஆம் பரிசு 33583 கே. அஜித் சஞ்ஜீவ்
C/o வி. எஸ். அந்தோனிப்பிள்ளை, சென். ஜேம்ஸ் வீதி, வசாவிளான்.

10 ஆறுதல் பரிசுகள்

1 11602 பி. சேதுபதி, அரசினர் வைத்தியசாலை, மல்லைத்தீவு.
2. 46377 ஏ. ஆர் எஸ் ஆசிரியகலாசாலை, கோப்பாய்
3. 48264 வி. யஸ்ரினி. H. F. C பயிலிட்டி.
4 30448 பி. ராஜ்மோகன்
5. 29585 ஆர். தர்சிக்கா, கருங்காலி, அச்சுவேலி.
6. 5557 ஐ. சகின்குமார், சிறீலங்கா வீதி, உடுவில் சுன்னாகம்.
7. 11330 சா. பா. வனிதா, அளம்பில்.
8 49478 ஆர். யோகமலர், பலாலி ஆசிரியர் கல்லூரி, கோப்பாய்.
9 25018 மி. ஏ. கே. ஜேம்ஸ் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
10 22281 யேசுதாசன், நாவாந்துறை!

இதற்குரிய பரிசில்களை 09- 06- 1990 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை சங்கப்பணிமனையில் அதற்குரிய சீட்டைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வின்சென்ற்
பொதுச்செயலாளர்
(13194)

# காணவில்லை

அம்பிகா! எங்கள் அருமை ஈஸ்வரியே! நீ அளவெட்டியிலிருந்து 27-5-90 சென்ற ஞாயிறு காலை புறப்பட்டு இவ் அறிவிப்பு உன் பெற்றோரிடமிருந்து 11520 நிமிடங்கள் கழிந்து தமிழ் ஈழத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகிறது. உனது இலட்சியத்திற்கு நீ இதுவரை எடுத்த பிரயத்தனங்களின் பெறுபேறு எதுவானாலும் அவற்றுடன் விரைந்து அதுவும் மிக மிக விரைந்து எம் முன்னிலையில் எம் கண் முன்னே வருவாய் என்று நம்பித் தவிக்கின்றோம் உன் வீட்டு வாசல் எந்நேரமும் திறந்திருக்கும் கடன் பெற்றவர்கள் இனியாவது...? உனது வரவை வழிமேல் விழி வைத்துத் தவித்துக் கொண்டிருக்கும்.

கமலாம்பிகையின் ஆறுமுகம்
அன்பு ஐயா, அம்மா

"கந்தன் அசம்"
29. திருநகர்,
கிளிநொச்சி. (3801)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## சிவகாமசுந்தரி தர்மசூரியலிங்கம்

தோற்றம்: 20 - 04 - 1924   மறைவு: 05 - 05 - 1990

பக்குவமாய் பிரமோதூதம் பரந்துவந்த சித்திரை
ஐக்கியமாய் ஆளும் ஐந்து ஏகாதசி - எக்கணமும்
சிவன் தாள் சரண் என்றே சிவகாம சுந்தரி அம்மா
அவன் தாள் பற்றினாள் பறந்து.

இன் சொல் பேசி இன்முகம் காட்டி அன்பே உருவாக
அரவணைத்து வழிகாட்டிப் பாசத்தின் ஒளியாய்,
- பண்பின்
பிறப்பிடமாய்த் திகழ்ந்தஎமது அன்பு அன்னையின்
ஆத்மா நற்சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை
நாகபூசணியம்மையின் திருவடிகளைப் பணிந்து
- நிற்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் சபிண்டீகரண கிரியைகளில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்:- ப. தர்மசூரியலிங்கம்,
மக்கள், மருமக்கள்.

8 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (3802)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இராசரத்தினம் பரமலிங்கம்

(இளைப்பாறிய உத்தியோக தாதி, அரசினர் வைத்தியசாலை - யாழ்ப்பாணம்)


மலர்வு: 21 - 06 - 1928   உதிர்வு: 04 - 06 - 1987

பெற்றபிள்ளை - நற்
பெயர்தனை பெற்று - நீ
மகிழும் நாள் தனில் - உன்
முகம் பார்க்க வேண்டும் - நீ
எங்கே உறங்குகின்றாய்? அம்மா!
உறங்கும் உன்னை
எழுப்ப வேண்டும் - நீ
எங்கே உறங்குகின்றாய் அம்மா!!
உனது பிரிவினில் ஆறாத் துயருற்றும்
உனது ஆத்ம சாந்தியை இறைவனிடம் வேண்டி
நிற்கும்

அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், மற்றும் உறவினர்கள்.

குளங்கரை ...
கொக்குவில் ...
கொக்குவில்

# ஓராண்டு நினைவஞ்சலி



கொழும்பு வைத்திலிங்கம் அன்ட் கம்பெனியின் முன்னாள் உத்தியோகத்தர்

## திரு. சே. ஆ. கந்தசாமி (இராசு) அவர்கள்

மலர்வு: 27 — 03 — 1939   உதிர்வு: 14 — 06 — 1989

திதி: வைகாசி சுக்கிலபக்ஷ ஏகாதசி

ஆண்டொன்று ஆயிற்றையா ஆற்றல் சேர் முகத்தைக் கண்டு
மாண்டவர் மீளாரென்ற வார்த்தையும் மெய்யாயிற்று
ஈண்டுநின் இடைவெளியும் என்றென்றும் நிரம்பாதையா
வேண்டாம் வரங்கேட்டும்மைப் பெற்றநாம் பித்தரானோம்
சலங்கால லானுக்கோர் தனியடியான் எங்கொளித்தீர்?
பலம் சேர்பத்திர காளியும்மைப் பறித்தது மேன்?
நலமான நல்லூரை நண்ணாமல் நீர் சென்ற
புலமறிந்தால் ஓடோடிப் புறத்தாலே வந்திடுவோம்.
சப்பரம் அன்று தாயைத் தாங்க முன் நீர் சுமந்தீர்
இப்பொழு தென்னசெய்வீர் ஏங்கியரற்றுகின்றோம்
அன்று மகோற்சவத்தில் அன்னைக்குச் சேவை செய்தீர்
இன்றுமது நினைவலைகள் இதயத்தை அராவுதையா

● உமது ஆன்ம ஈடேற்றத்துக்காக இன்று பிரார்த்தனை செய்கிறோம் ●

தாய், தந்தை சே. ஆறுமுகம் தம்பதி
மனைவி பொற்கொடி கந்தசாமி,
பிள்ளைகள் ரவிசங்கர், சிவசங்கர், உமாசங்கர், சுபத்திரா, வாசுகி. யசோதரா.

நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு.
யாழ்ப்பாணம். [13193]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

**பொருள்:**

அலர் கூறுவதால் காமத்தை அடக்குவோம் என்று முயலுதல், நெய்யால் நெருப்பை அவிப்போம் என்று முயல்வதைப் போன்றது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

04 - 06 - 1990 த. பெ இலக்கம் 25

# காணி நிலம் தேடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி இல்லாமல் இருப்பவர்களுக்கு, பிற தமிழ் மாவட்டங்களில் காணி பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் ஈடுபட உள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

அரசாங்க அதிபர் இந்த நல்ல முயற்சியில் தீவிரமாகச் செயற்பட்டு அதில் வெற்றி காண வேண்டும் என்று நாமும் விரும்புகிறோம். அதற்கு யாழ்ப்பாண மாவட்ட மக்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி (பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய) பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் காணியற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடியதாக, தகுந்த அரசாங்க காணிகள் குறைவு அதனாலேயே பிற தமிழ் மாவட்டங்களில் உள்ள அரச காணிகளைப் பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணித் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக மாறி வருவது எல்லோரும் அறிந்த ஒன்று. முந்திய தலைமுறையில் ஒரு வீடும் வளவுமாக இருந்த காணியில் இப்போது நான்கு வீடுகள் முளைத்திருப்பதைக் காணலாம். அல்லது முன்னர் ஒரு தாய்க்குச் சொந்தமாக இருந்த வீடு இப்போது நான்கு பிள்ளைகளின் குடியிருப்புகளாக மாறி இருப்பதையும் காணலாம், வயல் நிலங்களை நிரப்பி வீடு கட்டி விவசாயத்தைச் சுருக்கும் ஆபத்தும் தலைதூக்கி உள்ளது.

காணி குட்டி போடுவதில்லை. அதனால் சனத்தொகை பெருகும் போது காணிக்குத் தட்டுப்பாடு உண்டாவது இயல்பு. அதன் பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணித் தட்டுப்பாடு இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னரே தலையெடுத்து விட்டது.

1983 இனக்கலவரத்துடன் நிலைமை மேலும் மோசமாகியது. யாழ்ப்பாணத்தில் இருந்த சீதனக் காணிகளை, வீடுகளை விற்று. சொந்தக்காரரை கைவிட்டு, கொழும்பிலும் பிற இடங்களிலும் சொத்துச் சுகம் தேடியவர்கள் எல்லோரும் அகதிகளாக வந்த பாடத்தோடு, குடாநாட்டில் தங்களுக்கென இரண்டு பரப்புக் காணியாவது வேண்டுமென நினைத்தார்கள்.

அதன் விளைவாகவும் காணித் தட்டுப்பாட்டின் பரிமாணம் அதிகரித்துள்ளது. இடப் பற்றாக்குறையின் மறு வடிவம் காணி விலையேற்றம். வெளிநாட்டுப் பணத்தின் தாராளப் புழக்கத்தால், காணி விலை வான் முகட்டளவுக்கு உயர்ந்து வருகிறது. போர் நிலைமை என்றதும் சற்று வீழ்ச்சி கண்ட காணி விலை, இப்போது இயல்பு நிலை என்றதும், தனது மண்ணில் தங்கியிருந்து நேர்மையாக உழைத்து வாழும் ஒருவனின் கைக்கு அப்பால் உயர்ந்துவிட்டது! வெளிநாட்டுவாசிகளையும், முதலாளிகளையும் விட ஏனையோருக்கு காணி கற்பனைப் பொருளாக மாறிவருகிறது யாழ்ப்பாணக்குடாநாட்டில்!!

இத்தகைய ஒரு இடநெருக்கடியான, இக்கட்டான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தவர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பிற தமிழ் மாவட்டங்களில் போய்க் குடியேறுவதை விட வேறு மாற்றுவழியில்லை. இப்போது போய்க் கொண்டிருக்கும் வேகத்தில், குடாநாட்டு மக்களில் 75 சதவீதமானோர் ஒரு துண்டுக் காணியோ அல்லது ஒரு சிறு குடிசையோ இல்லாத நிலை விரைவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படி ஒரு நிலை வருவதைத் தடுப்பதற்கு, குடாநாட்டு மக்கள் வெளிமாவட்டங்களில் சென்று குடியேறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். கிளிநொச்சியில் காடுகள் காணிகளாகிய போது, பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்த போதிலும், அதனைப் பொருட்படுத்தாது சென்று கடந்த தலைமுறையினர் குடியேறியதனால் தான், இப்போது அதனை ஒரு தமிழ் மாவட்டமாகக் காணக்கூடியதாக உள்ளது. இல்லையேல் அதுவும் இன்னொரு வவுனியாவாக அல்லது திருகோணமலையாகவே இருந்திருக்கும்

ஏன்? மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைக் கூட சிங்களக் குடியேற்றம் ஏப்பம் விடும் ஆபத்து இன்னும் நீங்கிவிடவில்லை. அவற்றைத் தமிழ்ப் பிரதேசங்களாகப் பாதுகாத்து வளமடையச் செய்ய வேண்டிய பொறுப்பும் தமிழர்களுடையதே.

எனவே, அண்ணன் தம்பி அருகில் இருக்க வேண்டும், அயலவர்கள் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற பழைய அபிலாஷைகளை மறந்து குடாநாட்டிற்குள் முடங்கிக் கிடந்து சுகாதாரக் கேடுகளைத் தேடிக் கொள்வதை விட, வெளிமாவட்டங்களில் சென்று குடியிருப்பதற்கு யாழ்ப்பாண மக்கள் முன்வர வேண்டும்.

காலம் வேகமாக மாறிவரும் வேளையில் "சுற்றிச் சுற்றியும் சுப்பரின் கொல்லைக்குள்" நடக்கப்பழகாமல் பரந்து, செறிந்து வாழப்பழகி, தமிழ் மண்ணைக் காப்பாற்றி, வளமாக்க முன்வர வேண்டும். இது யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்குரிய பெரும் பொறுப்பு.

## கிளிநொச்சியில் வெளியீட்டுவைபவம்

கிளிநொச்சி, ஜூன் 04

சமூக விஞ்ஞான சுடர் வெளியீட்டு வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

திரு. நா. சோதிநாதன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். திரு. பொ. விவேகானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மறைந்த போராளியான வண்ணனின் (கலைஜீவன்) தந்தை திரு. மு. சீவரத்தினம் முதற்பிரதியைப் பெறுவார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் திரு. க. மாணிக்கவாசகர், கல்வி அதிகாரி திரு. வேலாயுதபிள்ளை, ஜனாப் பா.ச மொகைதீன் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

திருவாளர்கள் முத்து சிவலிங்கம், திருஞானம், விந்தன் ஆகியோர் திறனாய்வுரை நிகழ்த்துவர்.

நூலாசிரியர் திரு. அ. கௌரிகாந்தனும் உரையாற்றுவார். திரு. நா. யோகேந்திரநாதன் நன்றியுரை ஆற்றுவார். (ஒ)

வடக்கு-கிழக்கு

# உள்ளூராட்சி மன்ற வெற்றிடம் உடன் நிரப்பப்பட வேண்டும்

## அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவிடம் கோரிக்கை

கொழும்பு ஜூன் 4

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து வரும் சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட எம்.பி திரு. கே. நவரத்தினம் பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ்பெரேராவைக் கோரியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பாகமாகாண சபைக்கு எந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கும் படியும் அவர் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவைக் கோரி உள்ளார்.

வடக்கு-கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தற்போது விசேஷ ஆணையாளர்களின் கீழ் இருந்து வருவது தெரிந்ததே.

இந்த விசேஷ ஆணையாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் சிற்றூழியரை நியமிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த அதிகாரம் வடக்கு - கிழக்கு மாகாண அரசினால் உள்ளூராட்சி சேவைத் திணைக்களத்துக்கு 27-09-89 திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட 12/89 இலக்க சுற்றறிக்கை மூலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்படும் சிற்றூழியர் வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. இதனால் உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் பொதுவேலை சுகாதாரச் சேவைகள். மின்சார வேலைகள் பாதிக்கப்படும் ஆபத்து உருவாகி வருகிறது.

தற்போதைய நிலை நீடிக்குமானால் உள்ளூராட்சி மன்றங்கள் செயல இழந்து போகலாம் என்றும் திரு. நவரத்தினம் எம்.பி சுட்டிக் காட்டி உள்ளார். (இ)

### மட்டக்களப்பு விஜயம்

மட்டக்களப்பு, ஜூன் 4

இந்துசமய அலுவல்கள் துணை அமைச்சின் செயலாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன், தமிழ் அலுவல்கள் பிரதிப்பணிப்பாளர் ஜனாப் ஏ. எம். நகியா ஆகியோர் அண்மையில் மட்டக்களப்புக்கு வருகை தந்தனர்.

மட்டக்களப்பு விபுலானந்த இசைநடனக் கல்லூரியின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் வருகை தந்தனர். இவ்வருகையின் போது இக்கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பது தொடர்பாக அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன், மட்டக்களப்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் ஆகியோருடன் கலந்துரையாடினார்கள். (இ-ரி)

# பிந்திய கட்டண தபால் சேவை: பலரும் பயன்படுத்துவதில்லை

யாழ்ப்பாணம் ஜூன் 4

தபால் திணைக்களமும்-ரயில்வே திணைக்களமும் இணைந்து நடத்தும் பிந்திய கட்டணம் தபால் சேவையை வட பகுதியில் பலர் உரிய முறையில் பயன்படுத்துவது இல்லை என சொல்லப்படுகிறது.

இதன்படி காங்கேசனில் மாலை 6.30மணி வரையும் யாழ்நகரில் மாலை 7. 15 மணி வரையும் கிளிநொச்சியில் இரவு 9.30 மணி வரையும் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆயினும் இந்த சேவையை மக்கள் பெரும்அளவு பயன்படுத்துவது இல்லை என சொல்லப்படுகிறது

பலருக்கு இவ்வாறான சேவை இருப்பது தெரியாமல் இருக்கலாம் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர் (இ- 9)

# பால் சேகரிப்பு: லிப்கோ திட்டம்

வவுனியா ஜூன் 4

செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவில் உற்பத்தியாகும் பால் முழுவதையும் சேகரித்து. அதை நாளாந்தம் வவுனியாவுக்கு கொண்டு வரும் பணியை கால் நடைப் பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கமான லிப்கோ மேற்கொள்ளும்.

சுயதொழில் முயற்சிக்கு ஊக்கந்தரும் இத்திட்டத்துக்கு வவுனியா அரச அதிபர் 1 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியதுடன் சேகரிக்கப்படும் பாலை எடுத்து வர வவுனியா லிப்கோவினருக்கு வாகனம் ஒன்றை வழங்கவும் ஏற்பாடு செய்கிறார்.

கிராமங்களிலிருந்து செட்டிகுளத்துக்கு சைக்கிளில் பால் கொண்டு வருவோருக்கு சைக்கிள், பால் கொள்கலன்கள் என்பன இத் திட்டத்தின் மூலம் கடனாக வழங்கப்படும்என லிப்கோ தலைவியும் வவுனியா பிரிவு மிருக வைத்தியருமான டாக்டர் திருமதி ஜி. சிவபாதசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

லிப்கோவின் ஏழு கிளைகளால் தெரிவு செய்யப்படுவோருக்கு அரச அதிபர் ஒதுக்கிய இந் நிதி கடனாக வழங்கப்படும். (இ-164)

# வயாவிளான் - அச்சுவேலியில் சட்டவிரோத மின்பாவனை

பலாலி, ஜூன் 4

வயாவிளான், அச்சுவேலிப் பகுதிகளில் மீண்டும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருகிறது.

வயாவிளான் பகுதியிலும், அச்சுவேலிப் பகுதியிலும் பிற்பகல் 6 மணிக்குப் பின்பே இத்தகைய சட்டவிரோத மின்பாவனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது (இ-119)

## வன்னியில் பாத யாத்திரை

வவுனியா இந்துமாமன்றத்தினர் வன்னிமாவட்டத்தின் அனைத்து இந்துக் கோவில்களுக்கும் பாதயாத்திரை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆத்மஜோதி முத்தையா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பாதயாத்திரை கடந்த வெள்ளிக்கிழமை குருக்கள் குளத்திலிருந்து பூவரசங்குளம் வரையுள்ள இந்து ஆலயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் வீதிகளெங்கும் மாவிலைத் தோரணங்கள் நுங்கு, இளநீர் சகிதம் பூரண கும்பங்கள் வைத்து பாதயாத்திரைக் குழுவினரை வரவேற்று உற்சாகமூட்டி வருகின்றனர். (இ-160)

மாங்குளம் மக்கள் வங்கி

# அடகு நகைகளை மீளப்பெற 20 ஆம் திகதி சந்தர்ப்பம்

மாங்குளம், ஜூன் 4

மாங்குளம் மக்கள் வங்கியில் நகைகளை மீளப்பெற மூன்றாவது கட்டமாக இம்மாதம் 20 ஆம் திகதி சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

22-9-89 வரை வட்டியும் பணமும் கட்டி இதுவரை நகைகளை, மீளப்பெறாதவர்களுக்கே இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாக மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. தங்கசிவம் தெரிவித்தார். (இ-94)

சத்துருக்கொண்டான்

# சர்வோதயப் பண்ணையில் பிரமாண்டமான நாற்றுமேடை

பட்டிருப்பு ஜூன் 4

மட்டக்களப்பு மாவட்ட வனவள திணைக்களம் மாவட்ட சர்வோதய நிலையத்தின் அனுசரணையுடன் சத்துருக்கொண்டான் சர்வோதயப் பண்ணையில் பெரிய அளவிலான நாற்றுமேடை ஒன்றை அமைக்க உள்ளது.

கனிதரு, நிழல்தரு மரங்களை விருத்தி செய்யக்கூடியதாக இது அமைக்கப்படும். இதற்கு தேவையான நாற்றுக்களை சர்வோதயம் தயார்படுத்தும். வனவள திணைக்களம் பொலித்தீன் உறைகளை வழங்கும். (இ - 121)

# நியமனம் ரத்து செய்தியால் பயிலுநர் ஆசிரியர் குழப்பம்

வவுனியா ஜூன் 4

வவுனியா மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டு கடமை புரிந்து வருபவர்களின் நியமனங்கள் எந்த வேளையிலும் ரத்துச் செய்யப்படலாம் என வெளிவந்த செய்தியை அடுத்து வவுனியா மாவட்ட பயிலுநர் ஆசிரியர்களிடையே குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது.

கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் கல்வித் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல், நிபந்தனைகள், மற்றும் கல்வித்திணைக்களத்தின் பணிப்புரைகள் ஆகியவற்றுக்கு அமைய திறமை அடிப்படையிலான புள்ளி மதிப்[illegible] நடைபெற்று, மீளாய்வுகளும் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-164)

### சுற்றாடல் பாதுகாப்பு தினம்

யாழ்ப்பாணம். ஜூன் 04

யாழ்- கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான மாணவர் மன்றம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுற்றாடல் பாதுகாப்புத் தினத்தைக்கொண்டாடும்.

யாழ்- மாநகரசபைஆணையாளர் திரு. வி பி பாலசிங்கம் முதன்மை விருந்தினராகவும். வைத்திய கலாநிதி திருமதி. கதிர்காமர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [இ-7]

### ஐயனார் ஆலயத்தில்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 04

கிளாலி ஐயனார் ஆலயத்தில்வருடாந்தப்பொங்கல்உற்சவம் இம்மாதம் பதினைந்தாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (இ-117)

### இளம் பெண் உயிரிழப்பு

பச்சிலைப்பள்ளி ஜூன் 4

சமையல் தாமதமாகியதால் தந்தை ஏசினாராம். இளம் பெண் தமறோன் நச்சுத் திராவகம் அருந்தி மரணமானார். வன்னேரிக்குளத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-117)

## செய்திக்கொத்து

### ஓராண்டு நினைவஞ்சலி

மட்டக்களப்பு ஜூன் 4

படுகொலை செய்யப்பட்ட ஆரயம்பதி மகாவித்தியாலய அதிபரும். பிரஜைகள் குழுத் தலைவருமான அமரர் கே. கணபதிப்பிள்ளையின் ஓராண்டு நினைவஞ்சலி அண்மையில் மட்/ஆரயம்பதி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு. கே. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அமைப்பாளர் பிரியன் அன்னாரின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார். (இ-ரி)

### போட்டியிடத் தகுதி

பச்சிலைப்பள்ளி ஜூன் 4

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்டத் தமிழ்த் தினப் போட்டியில் கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை முதலிடம் பெற்று மாகாண ரீதியிலான போட்டிக்கு தகுதி பெற்றது. (இ-117)

### நிதி உதவி

பலாலி ஜூன் 4

கொட்டகப்புலம் அமலோற்பவ மாதா கோவில் புனரமைப்புக்கென திரு. ஞானப்பிரகாசம் கிறிஸ்தோஸ்திக் குடும்பத்தினர் சுமார் 3 இலட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளனர்.

கோவிலின் முகப்புத்திருத்தி அமைக்கப்படவும், கோவிலை புனிதமாக அழகாக்கி யேசுபிரானின் 'பாடு' களைப் சித்தரிக்கும் சிற்ப வேலைப்பாடுகளை அமைக்கவும் இவ்வுதவி நிதிபயன்படுத்தப்பட்டு வருகின்றது (இ-119)

### முன்னாள் அதிபர் படம்

சாவகச்சேரி, ஜூன் 04

1925 ஆம் ஆண்டு முதல் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி சாதாரண பாடசாலையின் அதிபராக 30 ஆண்டுகள் பணியாற்றிய திரு. வி.கந்தையாவின் நினைவாக அவரது படம் இன்று திங்கட்கிழமை கல்லூரியில் திரைநீக்கம் செய்யப்படும். (ப-31)

### ஆங்கிலதினவிழா

சாவகச்சேரி, ஜூன் 04

சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையின் ஆங்கில தின விழா அதிபர் திருமதி. எம். சபாரட்ணம் தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரி நகர கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் வெளிக்கள ஆங்கிலக்கல்வி ஆலோசகர் திரு. எஸ். சுந்தரேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். (ப-31)

சமய நிகழ்வில்

### புதூர் நாகதம்பிரான் உற்சவம்

வவுனியா ஜூன் 4

நாலு லட்சம் ரூபா செலவில் மூலஸ்தானம், வசந்த மண்டபம் என்பன அமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றுத் திகழும் புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இம்மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பக்த அடியார்களினதும் பொதுமக்களினதும் உதவியோடு பரிபாலன சபையின் முயற்சியினால் சுவாமி வீதிவலம் வருவதற்குரிய சகடை ஒன்றும் 50 ஆயிரம் ரூபா செலவில் செய்யப்பட்டுள்ளதாக பரிபாலன சபையின் தலைவர் திரு சு. குமாரசாமி தெரிவித்தார். (இ-164)

### எம்மைப் பற்றிச் சிந்திப்பார்களா?

ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்களாகிய நாம் எம்மைத் தயார் செய்து கொண்டிருக்கும் இந்த வேளையில் கல்வி நிறுவனங்களுக்கு அருகே (குறிப்பாக பி. எம். சி லேன் கன்னாதிட்டி வீதி.) உள்ள சாப்பாட்டுக் கடைகள், வானொலி திருத்தும் கடைகள் என்பன உரத்த ஒலியில் சினிமாப் பாடல்களை ஒலிபரப்பி வருகின்றன.

இரவு படிக்கும் நேரங்களில் அயல் வீடுகளில் உள்ளோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உரத்த சத்தமாக போடுவதால் எம்மால் அமைதியாக படிக்க முடிவதில்லை. வீணே பொழுதைக் கழிக்கும் இவர்கள் எம் நிலையைச் சிந்திப்பார்களா?

**பாதிப்புற்ற மாணவர்கள்**
யாழ்ப்பாணம்.

### பின்தங்கச் செய்யும் முயற்சி

வடமராட்சி கிழக்குப் பிரிவுக்கெனத் தனியான உதவி அரச அதிபர் பிரிவு இருக்கும் போது மருதங்கேணிப் பிரதேச சபையை புலோலிப் பிரதேச சபையின் கீழ் கொண்டு வருவது வடமராட்சி கிழக்குப் பகுதி அபிவிருத்தியைய மீண்டும் பின்தங்கச் செய்யும் முயற்சியாகும்

மருதங்கேணி பிரதேச சபைப் பகுதி பின்தங்கிய அபிவிருத்தி குறைந்த பகுதியாகும். எனவே ஒதுக்கப்படும் நிதி இப் பிரதேசப் பகுதி அபிவிருத்திக்கே செலவிடப்படவேண்டும் ஆனால் அபிவிருத்தி அடைந்தபுலோலி பிரதேச சபையின் கீழ் மருதங்கேணி பிரதேச சபை கொண்டு வரப்பட்டால், மருதங்கேணி அபிவிருத்தி நிதி புலோலி பிரதேசசபைக்கே பயன்படுத்தப்படும்

ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவுப்பரப்பு எல்லைக்கு அமையவே பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. வேறொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பிரதேச சபையின் கீழ் மருதங்கேணிப் பிரதேச சபையை மாற்றும் மர்மம்தான் என்ன?

**சி. வ. ராஜா**
கொழும்புத்துறை

### பயிலுநர் ஆசிரியர்

சாவகச்சேரி, ஜூன் 04

சாவகச்சேரி ஆசிரியர்களது முதலாம் கட்டப் பயிற்சி நிறைவுக்கான வைபவம் ஒன்று இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும். (ப-31)

### பயிற்சிக்கருத்தரங்கு

மட்டக்களப்பு. ஜூன் 04

மட்டக்களப்பு உள்ளூராட்சித்திணைக்களம், பிரதேச சபைகளின் தலைவர்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்கள், விசேட ஆணையாளர்கள் ஆகியோருக்கான ஒரு நாள் பயிற்சிக் கருத்தரங்கை அண்மையில் நடத்தியது. பிரதேச சபை நிர்வாகம், வரிஅறவீடு போன்ற விடயங்கல் இக் கருத்தரங்கில்இடம்பெற்றன.

இக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் கலந்து கொண்டார். உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. (இ-ரி)

## நாணய மாற்று விகிதம்

01-06-1990

இலங்கை மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.94 | 231 90 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.40 | 4002.60 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6698.11 | 6739.91 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2343.03 | 2373.15 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 690.84 | 706.35 |
| 100 | ஜப்பானிய யென் | 26.0505 | 26.4136 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் பாதுகாப்புக்கு ஜப்பானே அச்சுறுத்தலாம்

## கருத்துக் கணிப்பில் தெரிய வந்தது

வாஷிங்டன் ஜூன் 3

அமெரிக்காவின் பாதுகாப்புக்கு சோவியத் யூனியனின் இராணுவ வலிமையிலும் பார்க்க ஜப்பானின் பொருளாதார வலிமைதான் வருங்காலத்தில் அச்சுறுத்தலாக அமையப் போகின்றது.

நான்கு அமெரிக்கர்களில் மூவர் இப்படி கருதுவதாக வாஷிங்டன்போஸ்ட்-ஏ.பி.சி நியூஸ் நிறுவனங்கள் கூட்டாக நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில் தெரிய வந்து உள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புக்கு ஜப்பானுக்கு அடுத்து அச்சுறுத்தலாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து இயங்கும் போதை வஸ்துக் கடத்தல்காரர்களும் சர்வதேச தீவிரவாதிகளும் இருப்பர் என்றும் கருத்துக் கணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது. (எ)

# அரபு நாடுகளின் பயமுறுத்தல் குறித்து இஸ்ரவேல் பதில்

ஜெருசலம் ஜூன்3

அரபு நாடுகளின் பயமுறுத்தல்களை இஸ்ரவேல் சமாளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் தாக்கினால் ஈராக் பதிலடி கொடுக்கும் என்றும் இஸ்ரவேலுக்கு எதிராக ரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படும் என்றும் பக்தாத்தில் நடந்த அரபு நாடுகளின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்குமுகமாக இஸ்ரவேலிய இராணுவ அரசியல் அதிகாரிகள் முன்கண்டவாறு தெரிவித்தனர். (எ)

# மேற்கு நாடுகளின் புத்திமதி பற்றி கோர்பச்சேவ் கருத்து

ஒட்டாவா, ஜூன்3

எப்படி நடக்க வேண்டும் என்பதை மேற்கு நாடுகள் எமக்குச் சொல்லித்தர முயல்கின்றன.

சோவியத் யூனியன் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் வாஷிங்டன் நோக்கிப் புறப்படும் முன்னர் முன்கண்டவாறு செய்தியாளரிடம் சொன்னார்.

ஐக்கிய ஜேர்மனி உருவாக வேண்டும். ஐரோப்பிய நாடுகளிடையே இணக்கம் ஏற்பட வேண்டும். புதிய ஐரோப்பாவில் படைபலம் குறைக்கப்பட வேண்டும் என்றும் திரு. கோர்பச்சேவ் சொன்னார்

★ ருஷ்டி பிரச்சினை குறித்து வருத்தம் தெரிவிப்பின்

# பிரிட்டனுடனான ராஜரீக உறவை மீண்டும் ஏற்படுத்த ஈரான் விருப்பம்

## கோரிக்கை பரிசீலனையில் என லண்டனில் அறிவிப்பு

தெஹ்ரான் ஜூன் 3

பிரிட்டனுடன் மீண்டும் இராஜதந்திர உறவை ஏற்படுத்த ஈரான் விருப்பம் தெரிவித்துள்ளது.

'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதிய சல்மன் ருஷ்டி விவகாரத்தை ஒட்டி பிரிட்டனுடனான ராஜதந்திர உறவை ஈரான் முன்னர் கண்டித்துக்கொண்டது தெரிந்ததே

ருஷ்டியின் நூல் இஸ்லாத்தை நிந்தனை செய்வதாக அமைந்திருப்பதாகக் கூறிய ஈரான் அதனை பிரிட்டன் கண்டிக்க வேண்டு என்றும் ருஷ்டி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது அவரை நாடுகடத்த வேண்டும் என்று கோரியது.

பிரிட்டன் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டது.

அதன் பின்னர் மறைந்த ஆத்மீகத் தலைவர் கொமேனி ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ருஷ்டி விவகாரம் குறித்து பிரிட்டன் வருத்தம் தெரிவித்தால், மீண்டும் அந்த நாட்டுடன் ராஜதந்தர உறவை ஆரம்பிக்க ஈரான் இப்போது விருப்பம் தெரிவித்துள்ளது.

ஈரானின் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசு தீவிர பரிசீலனை செய்து வருவதாக லண்டனில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (எ)

# கராச்சியின் பாதுகாப்பை இராணுவம் பொறுப்பேற்றது

## பெனாசிரின்வளைகுடாபயணம்ரத்து

இஸ்லாமபாத், ஜூன் 3

பாகிஸ்தானின் முக்கிய நகரான கராச்சியின் பாதுகாப்பு இராணுவத்திடம் பூரணமாக ஒப்படைக்கப்பட்டது.

இனவன்செயல்கள் மோசமானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கராச்சியிலேயே தொடர்ந்து தங்கியிருந்து பிரதமர்பெனாசிர் பூட்டோ நிலைமையை அவதானித்து வருகிறார்.

ஆயுதங்களைமீட்பதற்கான தேடுதல்களில் இராணுவத்தினர் இன்று தொடக்கம் ஈடுபடுகின்றனர்.

இதனிடையில் —

நாட்டின் இனவன்செயல்களைக்காரணம் காட்டி பிரதமர் பெனாசிர் பூட்டோ நான்கு வளைகுடா நாடுகளுக்கு இடையேயான சுற்றுப் பயணத்தை ரத்துச் செய்து விட்டார்.

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடி, இச்சுற்றுப்பயணத்தை பெனாசிர் மேற்கொள்ளவிருந்தார். (எ)

# கிரீஸ்-இஸ்ரவேல் ராஜரீக உறவு

ஏதென்ஸ், ஜூன்3

இஸ்ரவேலுடன் முழு அளவிலான ராஜதந்திரத் தொடர்புகளை கிரீஸ் அரசு கடந்த வாரம் ஏற்படுத்திக் கொண்டது. (எ)

# கண்டனம்

டாக்கா, ஜூன்3

பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் அரசு சிட்டகொங் பகுதி மக்களுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களை புரிந்து வருவதாக டாக்கா பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் கண்டித்துள்ளது. (எ)

# அமெரிக்க யுத்தக் கப்பல்கள் லைபீரியாவுக்கு விரைவு!

மொன்றோவியா ஜூன் 3

லைபீரியாவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று தற்போதைய ஜனாதிபதி சாமுவல்டோ அறிவித்திருக்கிறார்.

இடது சாரிக் கெரில்லாக்கள் லைபீரியாவின் தலைநகரை நெருங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியானது.

லைபீரியாவில் ஜனநாயகம் தொடர்ந்து இருக்க அமெரிக்க அரசு உதவ வேண்டும் என்று ஜனாதிபதி டோ வேண்டுகோள் விடுத்திருக்கிறார்

இதனிடையில் — லைபீரிய தலை நகரில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளில் நலன்களைக் காப்பாற்ற ஆறு யுத்தக் கப்பல்களையும் 2,000 கடற்படை வீரர்களையும் அனுப்பி வைத்துள்ளது.

★ அமெரிக்க-சோவியத்

# ஆயுதக் குறைப்பு உடன்பாடு; மைல்கல் என புஷ் வர்ணனை!

வாஷிங்டன் ஜூன் 3

ஆயுதக்குறைப்பு சம்பந்தமான உடன்பாடு ஒன்றில் நேற்று அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவும் கைச்சாத்திட்டனர்.

இரசாயன ஆயுதங்களை பெருமளவில் அழித்துவிடுவது என்பது இந்த உடன்பாட்டின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

அணு ஆயுதங்களைக் கணிசமாக குறைத்துக்கொள்ளவும் இரு தலைவர்களும் இணக்கம் கண்டனர்.

மரபு வழி ஆயுதங்களை குறைப்பது பற்றிய பேச்சுக்களை தொடர்வது என்றும் இரண்டு ஜனாதிபதிகளும் உடன்பட்டனர்.

இந்த உடன்பாடு இரு நாடுகளினதும் வரலாற்றில் மட்டுமல்ல, உலக சமாதானத்தைப் பொறுத்த மட்டில் ஒரு மைல் கல்லாகும் என்று ஜனாதிபதி புஷ் வர்ணித்தார். (எ)

★ போர் ஏற்படின்

# பயங்கர விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராகுக!

## பாகிஸ்தானுக்கு இந்தியா எச்சரிக்கை

போர் ஒன்று ஏற்பட்டால் அதன் பயங்கர விளைவுகளை பாகிஸ்தான் அனுபவித்தே ஆகவேண்டும் என்று இந்திய ஜனாதிபதி இராமசாமி வெங்கடராமன் எச்சரித்தார்.

திபெத் - இந்திய எல்லைப் புறத்தில் இந்திய படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு அவர்கள் மத்தியில்பேசினார்.

அப்போது தான் இந்தக் கடும் எச்சரிக்கையை விடுத்தார். இந்தியாவின் எந்தப் பகுதியையும் எதிரிக்கு இந்திய இராணுவம் விட்டுக் கொடுக்காது என்றும் ஜனாதிபதி சென்னார். (எ)


குமுலுஸ் D.F. போட்டி


# BASF குமுலுஸ் D.F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ____________

முகவரி ____________

வியாபாரியின் பெயர் ____________

முகவரி ____________

Licence No S/731

FINCHEM AGRO DIVISION

பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

பீடை நாசினிகள் அபாயகரமானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் அமெரிக்க உறவு

வாஷிங்டன், ஜூன் 3

சோவியத் - அமெரிக்க உறவுகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் 3 ஆம் உலக நாடுகளின் அபிவிருத்தியில் முக்கியபங்கை வழங்க முடியும்என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

3 ஆம் உலக நாடுகள் இன்று மிகவும் கஷ்டமான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய வண்ணமுள்ளன.

சோவியத் யூனியனில் கடந்த சில வருடங்களாக ஏற்பட்டு வரும்அரசியல் பொருளாதார மாற்றங்கள் மேற்படி முதலாளித்துவநாடுகளின் நடவடிக்கைகளை இன்று வேறுகண்ணோட்டத்தில் நோக்குறது.

எனவேதான்சோவியத் அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளினூடாக 3 ஆம் நாடுகள் பெரிய பொருளாதார இலாபங்களை எதிர்பார்க்கின்றன. (எ)

# பாகிஸ்தானில் ஒற்றர்கள் கைது

காபூல், ஜூன் 3

உளவு வேலையில் ஈடுபட்டிருந்த3 பாகிஸ்தானியர்களை ஆப்கன் புலனாய்வுப்பிரிவினர் சமீபத்தில் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர் பஹருத் மட்றமுத் ராவல் பிண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டஇவர் பாகிஸ்தான் இராணுவத்தில் சேவையாற்றிய பின்னர்ஒற்றர்பிரிவில் சேர்ந்தவராவார்.

சவூதி அரேபியஇராணுவ அதிகாரிகள் ஆப்கன் கெரில்லாக்களுக்கு ஆதரவு வழங்குவதாக இவர் தெரிவித்தார்.

அரபு நாடுகளில் தயாரிக்கப்பட்ட சஹர்ஏவுகணைகளை கெரில்லாக்கள்பாவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களிடம்இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் ஆப்கன் உள் விவகாரத்தில் இஸ்லாமாபாத் ஊடுருவதலைக் காட்டுகிறது என அதிகாரி ஒருவர்தெரிவித்தார். (எ)


# தான்சன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், தெல்லிப்பழை.

O|L DAY CLASS
(பகல் நேர வகுப்புகள்)
காலை 8 மணி முதல்
பி. ப. 1 மணி

ஆரம்பம்: 05 - 06 - 90

விஞ்ஞானம்: J. R. சூரி
கணிதம்: மகேந்திரன் – மதி

"ஏனைய சகல பாடங்களும் நடைபெறும்".
[-சி4545]


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:-
29- 07- 1929

இறப்பு:-
05- 05- 1990



## விக்டோறியா ஜெயமணி வேலாயுதபிள்ளை

பாசத்துடன் எம்மை வளர்த்த அன்பு அம்மாவே! எங்களை பாராமல் நீங்கள் பிரிந்ததேனா? உங்கள் அன்பு முகம் பார்க்க ஓடோடி வந்தோம். நாம் வரு முன்னே நீங்கள் இறைவனடி சேர்ந்ததேனோ!

நீங்கள் எங்களையும் எங்கள் மண்ணையும் பிரிந்து இன்றோடு ஒரு மாதம் ஓடி மறைந்தாலும் எம் கண்களில் நீர் வழிய மனமுருகி நிற்கின்றோம்.

உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15, சந்தனமாதா,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(13329)

## Applications are Called for Short - Term Counselling Training Program

The Association for Health and Counselling is calling for applicants who are interested in pursuing an intensive training program in psychological counselling. The training will take place on weekends and it will be held in English. Preference will be given to residents of Kilinochchi, Vavuniya and Mannar.

Please write or contact
"SHANTHIHAM"
21, First Cross Street,
Jaffna,

For your application form. The closing date for applications is August 31, 1990

Executive Director.

[3640]


# திருமலையில் மேஜர் கஜேந்திரன் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

திருகோணமலை ஜூன் 04 தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மூதூர்ப் பிராந்தியத் தளபதி மேஜர் கஜேந்திரனின் (சசிதரன்) மூன்றாம் ஆண்டு சிரார்த்த தினத்தை யொட்டி கரபந்தாட்டப் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வடக்குக்-கிழக்குமாகாணங்களின் விளையாட்டுக் கழகங்கள்பங்குபற்றும் அப்போட்டிகள் திருகோணமலை இந்துக் கல்லூரிமைதானத்தில் இம்மாதம்23 ஆம், 24ஆம்திகதிகளில் நடைபெறும் இறுதிப்போட்டி 25 ஆம் திகதி நடைபெறும்.

வெற்றி பெறும் கழகங்களுக்கு கஜேந்திரச் சவால் கேடயமும், கஜேந்திரன் வெற்றிக்கிண்ணமும் பெறுமதிமிக்கதான பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ-155)

## உள்ளத்துக்கு உறுதி கல்வி; உடலுக்கு உறுதி விளையாட்டு

### உதவிக் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம் ஜூன் 4

உள்ளத்துக்கு உறுதி தருவது கல்வி. அது போன்று உடலுக்கு உறுதி தருவது விளையாட்டு. விளையாட்டுக்கள் மாணவர்களை உற்சாகப்படுத்தி உடலுறுதியை மட்டுமல்ல இலகுவில் பெற முடியாத மனோ பலத்தையும் தருகின்றன.

வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண உதவிப் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா மேற் கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. கதிர் செல்வநாயகம் திரு. சி. தியாகராசா தலைமையில் போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றுகையில் "மாணவர் வாழ்க்கையில் ஆரம்ப பாடசாலைகள் கல்வியின் அத்திவாரமாக அமைகின்றன. அவர்களின் எதிர் காலம் ஆரம்பக் கல்வியிலேயே தங்கியுள்ளது" என்றார்.

அதிபர் திரு. கதிர். செல்வநாயகம் பேசுகையில் "விளையாட்டுத்துறையில மாணவர்களை ஊக்குவிப்பது ஆசிரியர்களின் கடமைமட்டுமல்ல. பெற்றோர்களினதும் கடமை ஆகும்" என்று கூறினார்.

சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் கொத்தணி அதிபர். திரு. அ. பஞ்சலிங்கம் அகதிகள் புனர்வாழ்வு நிதியச் செயலாளர் திரு. கு. கிட்ணர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அப்பர் இல்லம் முதலாம் இடத்தையும், ஆருரர் இல்லம் இரண்டாம் இடத்தையும், சம்பந்தர் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி யசோதரா தியாகராசா வழங்கினார். (இ)

ஓமந்தை கொத்தணி

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 4

ஓமந்தைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை ஓமந்தை மகா வித்தியாலய மைதானத்தில் ஓமந்தை கொத்தணி அதிபர் திரு. சு. மர்மலானந்தகுமாரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பதினைந்து அங்கத்துவப் பாடசாலைகள் கலந்து கொள்கின்றன,

பிரதம விருந்தினராக வவுனியா உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. வி. கெ. நாகராஜா கலந்து கொள்வார் இப்போட்டியில்நாவலர் வள்ளுவர்' பாரதி ஆகிய இல்லங்கள் பங்குபற்றும். (இ)

17 வயதுக்கு உட்பட்டோர் கிரிக்கெட்

## வெற்றி- தோல்வி இன்றி முடிவு

யாழ்ப்பாணம் ஜூன் 4

கனகரத்தினம்மத்திய மகா வித்தியாலய 17 வயதுக்கு உட்பட்டோர்கிரிக்கெட் அணி கொக்குவில் இந்துக்கல்லூரியினதும் சென்ஜோன்ஸ் கல்லூரியினதும் 17 வயதுக்கு உட்பட்டோர் அணிகளுடன் சினேக பூர்வமான போட்டிகளில் ஈடுபட்டது.

இப்போட்டிகள்வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தன.

கனகரத்தினம் ம. ம. வி. க்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் முதலில் ஆடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 112 ஓட்டங்களுக்கு ஆட்டம்மிழந்ததுசிறிகரன்40, ஆருரன் 22 ஓட்டங்களைப் பெற்றனர் பந்து வீச்சில் பிரணவன், வசீகரன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய கனகரத்தினம் ம. ம. வி. அணியினர் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 104 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது முதலாவது இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டனர் பாஸ்கரன் 27, இளங்கீரன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றனர் சிறிசரன் 5 விக்கெட்டுக்களையும், ஜெயமனோகரன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடியகொக்குவில் இந்து அணியினர் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 118 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இரண்டாவதுஇன்னிங்ஸை நிறுத்தினர் ரஜீவன் 43, குணசீலன் 39, மதன 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

கனகரத்தினம்ம. ம. வி. அணியினர் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 72 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் முடிவடைந்தது ரஞ்சன் ஆட்டமிழக்காமல் 28, பாஸ்கரன் 12, வசீகரன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

கனகரத்தினம் ம. ம. வி. க்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி101 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது ஆஞ்சலின்மான்ஆட்டம் இழக்காமல்39 ஓட்டங்களைப் பெற்றார் ஜெயக்குமார், வசீசரன், பாஸ்கரன் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

கனகரத்தினம் மகாவித்தியாலய அணியினர் தமதுமுதலாவது இன்னிங்ஸில் 117 ஓட்டங்களைப் பெற்றது, வசீகரன் 28, ரஞ்சன் 20, பிரணவன் 17ஓட்டங்களைப் பெற்றனர் ஜெயந்தன் 4 விக்கெட்டுகளையும்சுரேஸ்குமார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய சென் ஜோன்ஸ் அணியின் ஆட்ட நேரமுடிவின்போது3விக்கெட்டுகளை இழந்து 205ஓட்டங்களைப் பெற்றது சுரேன் குமார் 100, ஆஞ்சலின்மான் ஆட்டம் இழக்காமல்61 ஓட்டங்களைப் பெற்றனர். (இ-மு)

## வீதி புனரமைப்பு

கோப்பாய், ஜூன், 4

வடகோவை இளைஞர்கழகத்தினர், கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் வீதியை சிரமதானம் மூலம் புனரமைத்தனர். (இ-72)

# தியானம், கூட்டு வழிபாடு மூலம் மனித மனம் மேம்படுகிறது

### சாயி சமித்தி விழாவில் உரை

தியானம், கூட்டுவழிபாடு, பஜனை ஆகியவற்றில் மனித மனம் மேம்பட்டு இறைவனைச் சேரும் மார்க்கத்தை அடைகின்றது. உருவவழிபாடுகளில் அக்கறைகொண்டு, இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதன் மூலம் நாம் இறைவனை தினமும் காணலாம்.

முள்ளிய வளை சாயிசமயத்தியின் சார்பில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனை, வழிபாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இந்திய இலங்கை கலாசார பேரவைத் தலைவர் வழக்கறிஞர் திரு. இரா. இராஜகோபால் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் "ஒவ்வொரு நாளும் இறைவனை வழிபடுவதை நாம் வழக்கமாகக் கொள்ள வேண்டும். யார் எந்த சமயமாக இருந்தாலும் அவரவர்களின் இஷ்ட தெய்வத்தின் திருவுருவத்தை மனதில் கொண்டு தியானத்தினால் இறைவனைக் காணலாம்.

தியானத்தின் மூலம் நாம் வேண்டியதை வேண்டிய நேரத்தில்இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே ஒவ்வொருவரும் மனதை சுத்தப்படுத்தி தியானம் செய்யப் பழக வேண்டும் இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இப் பிரார்த்தனை நிகழ்ச்சி வழிபாட்டுக்கு தலைமை வகித்த முல்லைத்தீவு மாவட்ட சாயி சமித்தியின் தலைவர் டாக்டர் குணரட்ணம் "சிறுவர் சிறுமியர்கள் நல்வழிப்படுத்தப்பட்டு நாட்டின் சிறந்த வல்லுனர்களாக உருவாக வேண்டும். பாடசாலை மாணவ மாணவியர்களை ஊக்கப்படுத்த கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப போட்டி என்பவை நடத்தப்பட வேண்டும் — என்றார்.

இந் நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டனர். (இ-7)

கிளிநொச்சியில்

## புனரமைப்பு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் நோக்கில் மாவட்ட அரச அதிபர் திரு. கே மாணிக்கவாசகர் தலைமையில் கிளிநொச்சி கச்சேரியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபை புனர்வாழ்வு அமைச்சின் பதில் செயலாளர் திருபத்மநாதன், விடுதலைப் புலிகளின்வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் சந்திரன். விடுதலைப் புலிகளின் பிரமுகர் சிவபாதம், ஈழவர் ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தில்லைநாதன், மற்றும் உயர் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ப - 76)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா செல்வநாயகம்
(முன்னாள் பட்டினசபை தலைவரும், அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும்)

மலர்வு: 1909 - 08 - 23
உதிர்வு: 1988 – 05 – 28
திதி: 04 — 06 — 1990

எங்கள் அன்புத் தந்தையே!

நீங்கள் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மானியம்பதி"
மானிப்பாய். (3696)


## I. A. B (Inter & Finals)
## DEC 1990 EXAMINATION

வகுப்புக்கள் ஆரம்பம்: 9 6- 1990
பதிவுகளுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
(Result Oriented Institute in North)
14, St. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(சி/4701)



## விவசாயிகளே!
## வெங்காயப் பயிரில் களைகளின் தாக்கமா?
# கோல் 2 ஈ

★ போட்டி இட்டு வளரும் சகல களைகளையும் விதைகள் முளைக்க முன் அழிக்கவல்லது.

★ இரண்டு மாதங்களுக்கு மேல் களைகளில் இருந்து பாதுகாப்பு

★ பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

விவசாய இரசாயனங்கள் அபாயகரமானவை அவதானமாகக் கையாளவும்.

CIC கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்

த. பெ. எண் 352, கொழும்பு.


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

## பதவி வெற்றிடங்கள்

(தற்காலிகம்)

கீழ்க் குறிப்பிடப்படும் தற்காலிகப் பதவிக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. லொறிச் சாரதிகள்**

சம்பளம்:- ரூ. 805/- உடன் சங்கத்தால் வழங்கப்படும் அலவன்சுகள்.
தகைமை:- 5ஆம் வகுப்புச் சித்தியுடன், பஸ் லொறி ஆகியன ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரமும், 04 வருட அனுபவமும்.
வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 20 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

**2. லொறிக் கிளீனர்கள்**

சம்பளம்:- ரூ. 700/- உடன், சங்கத்தால் வழங்கப்படும் அலவன்சுகள்.
தகைமை:- 5ஆம் வகுப்புச் சித்தியுடன், நல்ல தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்;
வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 30 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 15-06-1990**

விண்ணப்பப் படிவங்களையும், இப் பதவிகள் சம்பந்தமான நிபந்தனைகள், பிணைகள் மற்றும் தகவல்களையும் ரூ 5/- செலுத்திச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
31-05-90 (சி/4665)

யாழ். மாநகராட்சி மன்றம்

## கூறுவிலைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான கூறுவிலைகள் என்னால் எதிர்வரும் 11. 6. 1990 ஆம் திகதி பி. ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலை சமர்ப்பிப்போர் அப்பொருட்களை கட்டளை கிடைக்கப்பட்ட திகதியில் இருந்து ஏழு தினங்களுள் சபைக்கு விநியோகித்தல் வேண்டும். கூறுவிலைகள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்ட உறையினுள் உள்ளடக்கி உறையில் இடது பக்க மூலையில" கூறுவிலை எஸ். / சி / ஜீ /2 / 90 கட்டிடப் பொருட்கள்" எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பொருள் விபரம்:

1. எனாமல் பெயின்ற் 4 லீற்றர் ரின் (கறுப்பு, சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை, பிறவுண் ஒவ் வெள்ளை பட்டர் நிறங்கள்) ... மொத்தம் 46 ரின்கள்
2. எமல்சன் பெயின்ற் 4 லீற்றர் ரின் ஒவ் வெள்ளை ... 180 ரின் ... பட்டர் கலர் ... 180 ரின் ...
3. நிலத்தில் பதிக்கும் கற்கள் ... 20 x 20 செ. மீ. — 8 x 8 அங்குலம் Floor Tiles (20cmx20cm) 8''x8'' 2700 எண் ...
4. சுவரில் பதிக்கும் கற்கள் ... 4½ x 4½ அங்குலம் ... 36000 எண் ... Wall Tiles (4½'' x 4½'')
5. WASH BASIN-VICTORY MAKE with Pedestal [Victory] 2 Nos English Taps 10 Nos
6. COMMODE WITH WHITE SEAT COVER with English Cistern 04 Nos
7. SQUATTING PANS WITH FOOT, REST - INDIAN 11 Nos
8. PEDESTAL URINAL 12 Nos

வி. பி. பாலசிங்கம்,
ஆணையாளர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
1. 6. 90 (சி-4661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பம்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தில் புதிய ரி. எக்ஸ் மொடல் இஸுஸு லொறிக்கும், 24 ஸ்ரீ இஸுஸு லொறிக்கும் பொடிகள் அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்'' என விலாசமிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''லொறி பொடி அடித்தல்'' என எழுதப்பட்டு 18-06-90 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரத்தை சங்கக் காரியாலயத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்று ரூபா 500/- மீளப்பெறும் வைப்புச் செய்து விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ.
-சங்கம், பரந்தன்.

(சி/4641)


# பாதிக்கப்பட்ட பாடசாலைக்கு வசதி இல்லாத புதிய கட்டடம்!

## அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் கவலை

பலாலி, ஜூன் 4

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள்ளேயே இராணுவ நடவடிக்கையால் மிகவும் பாதிக்கப்பட்டு இன்றுவரை கல்வித் திணைக்களத்தால் போதிய கவனிப்பு இன்றி விடப்பட்ட ஒரே பாடசாலை பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகும். வடமராட்சியிலுள்ள எத்தனையோ பாடசாலைகளுக்குரிய போதிய நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் பயிலுகின்ற 500க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அடிப்படை வசதிகளே இல்லாத நிலையில் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் பயன் உண்டா?

பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் இயங்கும் தற்காலிக வெங்காயச் சங்கத்தில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச்சபைப் பொதுக் கூட்டத்தில் சபைச் செயலர் திரு பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு வை. கணேசமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

காங்கேசன்துறைக் கொத்தணி அதிபர் திரு. க. இராசதுரை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது; 1985 ஆம் ஆண்டு பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் இராணுவ முகாமின் விஸ்தரிப்புக்காக முற்றாக சுவீகரிக்கப்பட்டது.

அங்குகற்ற 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் அகதி நிலையில் தள்ளப்பட்டனர்.

போதிய பதில் இடவசதியோ, குறைந்தது நிலவசதியோ இதற்குப் பதிலாக ஏற்படுத்திக் கொடுக்கப்படாத சூழ்நிலையில் இப்பகுதிப் பெற்றோர்கள் நிதி சேர்த்து இரண்டு இலட்ச ரூபா பெறுமதியான காணியைப் பாடசாலைக்கென வாங்கினர்.

பெற்றார் பெற்றுக் கொடுத்த காணிக்குள் தற்போது கட்டடம் மட்டும் போடப்பட்டு வருகின்றது.

ஆனால் நீர் விநியோக வசதியோ, மலசலகூட வசதியோ இல்லை. இக்கட்டடத்தில், மாணவர்கள் எவ்வாறு தமது கல்வியைத் தொடர்வது? ஆசிரியர்கள் இங்கு எவ்வாறு கற்பிக்க வருவார்கள்? இயற்கை உபாதைகளைக் கழிக்கவும், நீர்பெறவும் அயலில் உள்ள வீடுகளே தஞ்சமாகவுள்ள தற்போதய நிலை இன்னும் தொடர வேண்டுமா? தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெங்காயச் சங்கத்துக்குள் 500க்கும் மேற்பட்ட ஆண்-பெண் வளர்ந்த பிள்ளைகளும், ஆசிரியர்களும் அடைத்து வைக்கப்பட்டவாறு கற்பிக்கப்படுகின்றனர்.

இத்தகைய சூழலில் கற்றலும் - கற்பித்தலும் எவ்வாறு நிகழ முடியும்.

இப்படி அவர் கூறினார்.

ஆசிரியர் திருமதி செல்லையா, கொத்தணி அதிபர் திரு. க. இராசதுரை உட்படப் பலர் உரையாற்றினர். (இ-119)

## கணக்குச் செய்யும் நாய்!

நாய் கணக்குச் செய்யுமா? பழக்கி எடுத்தால் சொல்லும் கணக்குகளை நாய் ''டக் டக்'' என்று செய்து முடிக்கும் என்பதை மாத்தளையைச் சேர்ந்த ரூபன் பெரேரா நிரூபித்துக் காட்டினார்.

அவர் ஆசையோடும் அன்போடும் வளர்க்கும் நாய்க்கு கணக்குச் செய்யக் கற்றுக் கொடுத்து அந்த நாயின் சாதனையை ஜனாதிபதி முன்னிலையில் காட்டினார்.

கூட்டலா, கழித்தலா, பெருக்கலா, பிரித்தலா, அல்லது நான்கும் சேர்ந்த கணக்கா? அவற்றை மனிதர்கள் மனக்கணக்காகச் செய்வது போல பெரேராவின் நாய் சுசரித்த மண்டபத்தில் செய்து காட்டியது. ஜனாதிபதி உட்படப் பலரும் அதனைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

இந்த நாய் கணக்குச் செய்யும் முறை நேற்று ரூபவாஹினிச் செய்தியில் காட்டப்பட்டது. (அ)

சாயி இயக்கம் படைத்துள்ள

# மனித மேம்பாட்டு கல்வி திட்டம் சர்வதேச முக்கியம் பெறுகிறது

யாழ்ப்பாணம் ஜூன் 4

சாயி இயக்கம் படைத்துள்ள மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம் இன்று சர்வதேச முக்கியத்துவம் பெற்றுவிட்டது. பல நாடுகளின் பாடசாலைக் கல்வி அமைதானத்தில் மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு பகவான் சத்தியசாயிசேவாசங்கத்தினரால் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட இரு நாட் கருத்தரங்கில் தலைமையுரை நிகழ்த்திய சமித்தித் தலைவர் மருத்துவ கலாநிதி. திரு. ரி. குணரெட்ணம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''மாணவர்கள் தமது அறிவு படிப்பை விருத்தி செய்வது, தமது திறங்களை வளர்த்துக் கொள்வது என்பதிலும் பார்க்க அவர்களை நல்ல குடிமகனாக, குடிமகளாக மலரச் செய்வதே மனித மேம்பாட்டுக் கல்வியின் மகோன்னத நோக்கமாகும்'' என்றார்'

விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மேலதிக நீதவான் திரு. என். அருள்சாகரன் பேசுகையில் ''இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் குழந்தை பிறந்ததும் தாயை அறிகிறது. பின் தந்தையை அறிகிறது. தந்தை மூலம் ஒரு குருவை நாடுகிறது. இவர்களின் வழி காட்டலின் பின்னணியில் இறைவனைத் தேடிச் செல்கிறது. இச்செயற்பாட்டின் போது சத்தியம் - நன்னடத்தை - அமைதி - அன்பு - சாத்வீகம் போன்ற நல்லியல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் திரு. க. தங்கராசா, றெட்பானா இயக்கத்தைச் சேர்ந்த திரு. பொன். பத்மநாதன், திருமதி சி. தனசிங்கம் திருமதி பி. ஐயம்பிள்ளை, திரு. அநு. வை. நாகராஜன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார். (இ)

## மதிலும் மைதானமும்

பட்டிருப்பு ஜூன் 4

எருவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா செலவில் விளையாட்டுமைதானமொன்றை மட்டக்களப்பு தேசிய சேவைகள் மன்றமும், 25 ஆயிரம் ரூபா செலவில் சுற்றுமதிலொன்றை அமைக்க எருவில் கிராமோதய சபையும் முன்வந்துள்ளன. (இ-121

## பிரிவுபசார விழா

கோப்பாய், ஜூன் 4

நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ல க. மயில்வாகனத்துக்கு அண்மையில் பிரிவு உபசார விழா நடாத்தப்பட்டது. (இ-72)


## பிறந்த நாள் வாழ்த்து



அனோஜன்



சிந்துஜா

ஜேர்மனியில் வசிக்கும் ரவீந்திரன் - சிவாஜினி தம்பதிகளின் செல்வங்களான செல்வன் அனோஜன் 08-06-1990, செல்வி சிந்துஜா 04-06-1990 ஆகியோர் தமது பிறந்தநாளைஇன்று ஜேர்மனியில் அவர்களதுஇல்லத்தில் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார்கள், ஜேர்மனியில் வசிக்கும் மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[3682]


# றிச்சாட் டி சொய்ஸா கொலை:

# சிரேஷ்ட பொலீஸ் அதிபரை கைது செய்ய நீதிவான்உத்தரவு

கொழும்பு, ஜூன் 4

பத்திரிகையாளர் றிச்சாட் டி. சொய்ஸாவின் கொலை தொடர்பாக சிரேஷ்ட பொலீஸ் அதிபர் றொனி குணசிங்காவைக் கைதுசெய்து ஆஜர் படுத்துமாறு மொரட்டுவ நீதிவான் திருமதி. ரோஹினி வல்கம கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

றிச்சாட் டி.சொய்ஸாவின் தாயார்டாக்டர் மனோராணி சரவணமுத்துவின் சத்தியக் கடதாசியில்தெரிவிக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து நீதிவான் இந்த உத்தரவைபிறப்பித்தார்

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இரவு தனது வீட்டுக்கு வந்துறிச்சாட் டி. சொய்ஸாவை கூட்டிச்சென்றவர்களில் திரு. குறானி குணசிங்கா இருந்தார் என்பதை நான் அடையாளங் காணக் கூடியதாகஇருக்கிறது - என்று டாக்டர் திருமதி. சரவணமுத்து தனது சத்தியக் கடதாசியில் தெரிவித்திருந்தார். (இ-எ)


இப்போது கிடைக்கக் கூடிய மிகச்சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி

**Varathar Student's Dictionary**

வரதர் மாணவர் அகராதி [ஆங்கிலம் - தமிழ்]

ஆக்கியோன்: கொக்குவில்கிழான் கா. வை. இரத்தினசிங்கம்


18400 சொற்கள் — 600 பக்கம், அறிமுக விலை ரூ 95/-

ஆங்கிலம் பயில்வோருக்கு அரிய துணை நூல்
தொகையாகப்பெறுவதற்கு,

ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(சி/4627)




## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்கும், கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

O/L DAY CLASSES பிரிவு 2
[8.30 — 1.30]
ஆரம்பம்: 06-06-1990

- ★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படும்.
- ★ கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
- ★ இலவசப் பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- ★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

[சி-4595]

## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன் B. Sc [Cey]

90 A/L ★ கடந்த கால வினா விடை வகுப்பு ★
ஆரம்பம்:- 04-06-90 திங் — 5.30 p.m.

★ ★ பிறப்புரிமையியல் ★ ★
ஆரம்பம்: 06-06-90 புதன் 4.30 p.m.
[3 வாரத்தில் முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்]

★ ★ ★ குருதித் தொகுதி ★ ★ ★
மீட்டல் வினா விடை — புதன் 5.30 p.m.

21, மணல் தரை லேன், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(சி-4633)

## மணமகள் தேவை

இந்து, உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த நல்ல அறிவும், அழகும் நற்பண்பும் உடைய விவாகரத்துப் பெற்ற பிள்ளை இல்லாத பொறியியலாளர் மகனுக்கு பெற்றோர் நல்ல அழகும், அடக்கமும், பண்பும், நிறைந்த 25-31 வயதிற்குட்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். வசதி, அந்தஸ்து, சீதனம் என்பன கவனிக்கப்படமாட்டாது. சாதகம், நேரம், பிறப்பு இடம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

இல: 709, C/o உதயன்.

(3686)

## COMPUTER கல்வி

முன் அனுபவமற்றவர்களுக்காக திறமை, தகுதி, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் IBM Computer களில் (Compatible) கல்வி.

Basic, dBase III +, Lotus 123,
Wordstar 5.0, Autocad,
Diploma I, Diploma II

கொழும்பு ICC இன் யாழ் கிளை
102, 3ம் குறுக்குத் தெரு.

பதிவு திகதி: 06-06-90 அல்லது முன்பாக

[சி-4629]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சில இளைஞருக்கு மட்டும் போராட்டம் சொந்தம் அல்ல

## மேஜர் சலாம் நினைவுக் கூட்டத்தில் வாஞ்சி

யாழ்ப்பாணம், ஜூன் 4

போராட்டம் என்பது ஒரு சில இளைஞர்களுக்கு மட்டும் உரியதல்ல; சிறுவர் முதல் பெரியோர் வரை தமது சுய நலங்களைச் சிறிது காலம் ஒதுக்கி வைத்துவிட்டு, எம்மோடு இணைந்து போராடினால் ஈழம் வெகு தூரத்தில் இல்லை.

உடுப்பிட்டிப் பிரதேசம், இமையாணன் என்ற கிராமத்தில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற மேஜர் சலாமின் இரண்டாவது நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் இப்படிக் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

ஒரு சில இளைஞர்கள் 'தமிழ் ஈழம்' பெற்றுத் தருவார்கள். நாம் எமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பலாம். சுகமாக வீட்டில வைத்திருக்கலாம். அல்லது அவர்களுக்கு நல்ல வேலைகளைப் பெற்றுக் கொடுக்கலாம் என்ற கனவுகளில்தான் இன்னும் சில பெற்றோர்கள் மிதக்கிறார்கள்.

இந்த நிலை மாற வேண்டும். இது நமது மண். இதை நமது பிள்ளைகள் எல்லோருமே போராடிப் பெற வேண்டும் என்று ஒட்டு மொத்தமாக எல்லாப் பெற்றோர்களும் எப்போது நினைக்கிறார்களோ, அன்றுதான் இம்மண் விடிவுபெறும்.

சிறீலங்கா அரசு எம்முடன் மோதி ஏற்கனவே 'சூடு கண்டிருக்கிறது. ஆகவே சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது' என்ற பழமொழியை அது புரிந்து வைத்திருக்கிறது.

ஆகவே, மீண்டும் ஒரு முறை எம்முடன் மோதுவதைத் தவிர்த்து, பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச் சூழ்நிலையில் உருப்படியான நடவடிக்கைகளை அது எடுத்து எமது தமிழ்பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முன்வரவேண்டும். இல்லையேல் இம்மண்ணில் போர் மேகங்கள் ஓய்வதற்கு வெகு காலம் பிடிக்கும்.

— இவ்வாறு அவர் கூறினார்.

மேற்படி கூட்டத்தில் திரு. அரசன், திரு. செங்கதிர், திரு. குணம் உட்பட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலர் உரையாற்றினர். (இ-7)

## கொழும்பிலும் தமிழ்த்தின விழா!

கல்வி அமைச்சின் ஆதரவிலான அகிலஇலங்கைத்தமிழ்த் தின விழா இம்மாதம்15, 16 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது.

கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் விழா நடைபெறும். சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொள்வர். (உ-எ)

## பாடசாலையில் கராட்டி

கராட்டி விளையாட்டு பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இலங்கை கராட்டி பவுண்டேஷனின் உதவியுடன் கல்வி அமைச்சு இத்திட்டத்தைச் செயற்படுத்த உள்ளது.

இதற்கு முதற்கட்டமாக ஆசிரியர்களுக்கு கராட்டியில் பயிற்சி அளிப்பது குறித்து அமைச்சு ஆலோசித்து வருகிறது. (ஓ-எ)

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 12 00-15.00 | ரூ. 14.00-16.00 | ரூ. 18.00-20.00 |
| வாழைக்காய் | ரூ. 8 00-10 00 | ரூ. 8.50-10.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 16 00-18.00 | ரூ. 14.00-18.00 | ரூ. 13.00-15 00 |
| பாகற்காய் | ரூ. 20.00-22 00 | ரூ. 15.00-17.00 | ரூ. 22.00-24.00 |
| கோவா | ரூ. 13 00-14.00 | ரூ. 14.00-15.00 | ரூ 16 00-18 00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22 00 | ரூ. 21.00-22.00 | ரூ 16 00-18 00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 17.00-18.00 | ரூ. 18 00-20.00 |
| பீற்றூட் | ரூ. 10 00-12 00 | ரூ. 10.00-12.00 | ரூ. 12.00-14.00 |
| பீன்ஸ் | ரூ. 18.00-20.00 | ரூ. 22 00-24.00 | ரூ. 18.00-20.00 |
| பூசணி | ரூ. 4 00- 5 00 | ரூ. 4 50- 5.00 | ரூ. 5.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 16 00-18.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 45.00-50.00 | ரூ. 48.00-50.00 | ரூ. 53 00-55.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 35.00-45.00 | ரூ. 30 00-35.00 | ரூ. 48.00-50.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 29.00-31.00 | ரூ. 30.00-32 00 | ரூ. 28.00-30.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 8.00-10.00 | ரூ. 8.00-10 00 | ரூ. 8.00-10.00 |
| வெண்டைக்காய் | ரூ. 16.00-18.00 | ரூ. 20.00-24 00 | ரூ. 18.00-20.00 |

அதிபர் தரம் பதவி உயர்வுகள்:

# அநீதி இழைக்கப்பட்டால் எவரும் முறையீடு செய்யலாம்

## கல்வி ஆணைக்குழு தலைவர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 4

அதிபர் தரம் - 1, அதிபர் தரம் - 2, அதிபர் தரம் - 3 பதவி உயர்வுகள் தொடர்பாக அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக அதிபர்களோ அல்லது ஆசிரியர்களோ கருதினால் - அவற்றை எமக்குச் சுட்டிக்காட்டினால் நீதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்வி ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மென்டிஸ் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு மேற்கண்ட உறுதியை அளித்துள்ளார்.

அதிபர் தரம் - 1, அதிபர் தரம் - 2 ஆகியவற்றுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஏற்கனவே கல்விச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்று முடிந்துள்ளன.

இந்த இரு தரங்களுக்குமான பதவி உயர்வு முடிவுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிபர் தரம் - 3 பதவி வெற்றிடங்களில் 60 சதவீத வெற்றிடங்களை நிரப்புவதற்காக போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தியோர் அழைக்கப்பட்டு ஜூலையில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

எனவே பதவி உயர்வு முடிவுகள் வெளியாகும்போது தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக அங்கத்தவர் எவராவது கருதினால் இது குறித்து ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மென்டிஸுக்கு பதவித் தபாலில் முறைப்பாட்டை அனுப்பிவிட்டு அதன் பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## ஈரோஸ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்படும்போது அந்தப் பிரேரணை தொடர்பான உயர்நீதிமன்ற விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு வழயாக —

அப்பிரேரணை ''நாட்டின் நலனுக்கு அவசரமானது'' என்ற பரிந்துரையை அமைச்சரவையிடம் இருந்து அரசு பெற்றுக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தற்போதுள்ள சூழ்நிலைகளின்படி ஈரோஸ் எம் பிக்கள் மேற்படி பிரேரணையை அடுத்தவாரமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பார்கள் என்றும் அறிய வந்தது. (அ-உ)

## தொலைபேசி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடியில் பொருத்தும் வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேலைகள் முடிந்ததும் பிரஸ்தாப இணைப்பு வழங்குவதற்கான பிரதம பாகமான ''கென்டெய்னர்'' அடுத்த மாதமளவில் இங்கு எடுத்து வரப்படும்.

இதனை நிலத்தின் அடியில் பொருத்துவதற்கான அறைகள் தற்பொழுது தயார் செய்யப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் வெளியூர் இணைப்புகள் பரிவர்த்தனை நிலையமூடாகவே வழங்கப்படும், துணுக்காயில் இந்த தொலைபேசி இணைப்புக்கான ''கோபுரம்'' ஒன்று அமைக்கப்படும். அது அமைக்கப்பட்டதும் இந்த 500 இணைப்புக்களும் நேரடி இணைப்புக்களாக்கப்படும். (இ-9)

# 10ஜே.வி.பியினர் கைது!

ஜே. வி. பியின் பதின்மூன்று பேர் கோஷ்டி' யைச் சேர்ந்த பத்துப்பேரை வெலிகம பொலீஸார் கைது செய்தனர்.

58 கொலைகள், 5 வங்கிக் கொள்ளைகள், 111க்கு மேற்பட்ட தீவைப்புச் சம்பவங்கள் மற்றும் கொள்ளைகள், ஆகியவற்றை இக் கோஷ்டியினர் செய்தனர். என்று பொலீஸார் தெரிவித்தனா.

இதனைத் தொடர்ந்து ஏராளமான ஆயுதங்கள். வெடிப்பொருட்கள், அரசு எதிர்ப்புப் பிரசுரங்கள் 850 தேசிய அடையாளக் கார்ட்கள் ஆகியவற்றையும் பொலீஸார் கைப்பற்றினர்.

ஜே. வி. பியினால் 'மரண தண்டனை' விதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. (உ-எ)

போக்குவரத்துச் சபை

# மக்கள் மயப்படுத்துவதை கண்காணிக்கக் குழு!

இலங்கை போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள விசேட குழு ஒன்று உலக வங்கியின் மேற்பார்வையில் நியமிக்கப்பட்டி உள்ளது.

மக்கள் மயப்படுத்தும் திட்டத்தை இக் குழு தயாரிக்கும். இது சம்பந்தமான அறிக்கையை வருகிற டிசம்பர் மாதம் இவ் விசேடகுழு அரசுக்கு சமர்பிக்கும்.

அதுவரை போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்து இயங்கும் என்றும் —

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையும் இயங்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

# உலக சுற்றாடல் வாரம் முல்லைத்தீவில் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

கடந்த 29 ஆம் திகதியிலிருந்து அனுஷ்டிக்கப்பட்டு வரும் உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக கடந்த 29 ஆம் திகதி திட்டப்பணிப்பாளர் திரு. ஆர். தர்மகுலசிங்கம் தலைமையில் மாவட்டத் திணைக்கள அதிகாரிகள் கூட்டமொன்று முல்லைத்தீவுக் கச்சேரியில இடம்பெறறது.

முல்லைத்தீவு, துணுக்காய், ஒட்டுசுட்டான, புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம் பகுதியிலுள்ள வைத்திய சாலைகள், வீதிகள் என்பன அவ்வபபகுதி உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளினால் சுத்தம் செய்யபபட்டு மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட பெருந்தெருக்கள் திணைக்களம வீதிகளிலுள்ள பெயாப் பலகைகள், மைல் கல்லுகள் என்பவற்றைத் திருத்தி வர்ணம் பூசும் நடவடிக்கையிலும், —

சுமநலச் சேவைத்திணைக்களம் தத்தம் பகுதியிலுள்ள சுமநலசேவை அலுவலகங்களை துப்பரவு செய்து மரம் நடுவதிலும் —

தேசிய வீடமைப்பு அதிகாரசபை மாங்குளம, ஒட்டான்குளம் வீட்டுத் திட்டப் பகுதிகளைத் துப்பரவு செய்து மரம் நடும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளா திரு. ப. பரம்சோதி மரங்களை நட்டுப் பாதுகாக்கக் கூடிய அரச திணைக்களங்களுக்கும், பொதுஸ்தாபனங்களுக்கும் மாங்கன்றுகளை விநியோகித்து வருகிறார்.

உலக சுற்றாடல் வாரத்தின் இறுதி நாளான நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு விவசாய திணைக்களம் விவசாய போதனாசிரியர்கள் மூலம ''கிருமி நாசினிகளின் நச்சுத் தன்மை'' பற்றிய விளக்கம் ஒன்றைப் பொது மக்களுக்கு அளிக்கவுள்ளது. (இ-7)

# நுளம்பு பெருக உதவுபவருக்கு அதே இடத்தில் அபராதம்!

நுளம்புத் தொல்லைஅதிகரிப்பதற்கு ஏதுவாக காணிகளை அசுத்தமாக வைத்திருக்கும் அவற்றின் உரிமையாளர்களுக்கு அந்த இடத்தில் வைத்தே (spot fines) அபராதம் விதிக்கக் கூடியதாக சட்டம் இயற்றும் படி அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது

இதற்காக நுளம்பினால் ஏற்படும் நோய் தொடர்பான சட்டத்தை திருத்தும்படி தேசிய ஆலோசனைச் சபை அரசுக்கு அனுப்பியுள்ள சிபார்சில் கோரியுள்ளது.

வளவுகளில், காணிகளில், தேங்காய்ச் சிரட்டைகள், வெற்றுத் தகரங்களைக் குவித்து வைத்திருக்கும காணி உரிமையாளர்கள், தண்ணீர் தேங்கிநின்று நுளம்புஉற்பத்தி ஆகக் கூடிய முறையில வடிகால்களை வெட்டி வைத்திருப்போர் ஆகியவர்கள் மீது அந்த இடத்தில் வைத்து அபராதம் விதிக்கப்படவேண்டும்.

- இப்படி சிபார்சில் விவரித்துக் கூறப்பட்டுள்ளது. (ஓ-எ)

## இராஜினாமா!

பஞ்சாப் ஆளுநர் நிர்மல் முகர்ஜி நேற்று தனது பதவியை ராஜினாமச் செய்தார்.

அவர் தனது ராஜினாமக் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

இவர் பஞ்சாப் ஆளுநராக சென்ற டிசம்பரில் தேசிய முன்னணியின் அரசால் நியமிக்கப்பட்டார். [உ-எ]

## காஷ்மீர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் யூசுப் ஜமீலைக் கைது செய்தனர் என்று புதுடில்லியில் உள்துறை அமைச்சுச்செயலாளர் சொன்னார்.

இது சம்பந்தமாக காஷ்மீரில் உள்ள இந்திய இராணுவத் தளபதி இராணுவ விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்திய இராணுவத்தினர் பி. பி சி செய்தியாளரான யூசுப் ஜமீலைக் கைது செய்யவில்லை என்று இந்திய அரசு முன்னர் மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## புத்தூர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டம் நடத்தப்படுகிறது.

கூட்டத்துக்கு வலிகாமம் பகுதி விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் தலைமை வகிப்பார்.

கூட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களான திரு. யோகரத்தினம் யோகி, திரு. காசிஆனந்தன், மகளிர் பிரிவு தலைவிகள் மாலினி, ஜெயா உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர். [ஓ-11]

# சமய, சமூக துறைகளில் சனசமூக நிலையத்தின் பங்கு

''வண்ணை - ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் சமய, சமூக, விளையாட்டுத்துறைகளில் அவ்வப்போது ஈடுபட்டும், போட்டிகளை நடத்தியும் வருகிறது''

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் பூங்காவனத்தன்று சமய அறிவுப் போட்டி ஒன்று நடைபெற்றது. இதில் வெற்றிபெற்றோருக்கு பரிசளிக்கும் வைபவத்தில் தலைமை வகித்துப் பேசிய நிலையத் தலைவர் திரு து. விஜயகுமார் முன்கண்டவாறு கூறினார்.

கோயிலின் அறங்காவல் தலைவர் திரு. வே. கந்தசாமி மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்தார்.

திரு. து. விஜயகுமார் தொடர்ந்து பேசுகையில் அடுத்தவருடம் விரிவான முறையில் அமையவுள்ள இவ்வகைப் போட்டிகளுடன் பொது அறிவுப்போட்டிகளும் நடத்தப்படும் என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. ஆ. ஜெயக்குமார் பேசுகையில், சிறிய அளவில் ஆரம்பமான இச் சனசமூக நிலையம் இன்று சுற்றாடலில் உள்ளோரது பத்திரிகை, சஞ்சிகை வாசிப்புகளுக்கு உதவிவரும் அளவுக்கு வளர்ந்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் என்றார்.

வெற்றி பெற்றோருக்கு பிரதமவிருந்தினர் பரிசு வழங்கினார். நிலைய சமயத்துயை அமைப்பாளர் திரு. க. சிவகுமாரன் நன்றியுரைத்தார். (ப-51)

## இந்தியா---

டன் தினசரி உறவு கொண்டு வருகிறார்கள் என்றும் அண்மையில் வெளியான புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது.

இந்தியாவுடன் இலங்கை பல வகையிலும் கலாசார, சமூகத் தொடர்புகளை வைத்திருப்பதாலும், இருநாடுகளுக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்து அதிகரித்திருப்பதாலும் இந்தியாவிலிருந்து இலங்கையருக்கு ''எய்ட்ஸ்'' பரவ அதிவாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் ''எய்ட்ஸ்'' தொற்றுக்கு இலக்கானவர்கள் அடையாளம் காணப்பட்டால், அவர்களைச் சமூகத்திலிருந்து வேறுபடுத்தி ஏனையோருக்கு அந்நோய் பரவாமல் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஏதும் இங்கு செய்யப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ]

## ஐ.தே.கவுக்கு--

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடு திரும்பியதும் எதிர்க்கட்சி முன்னணி பற்றிய அறிவிப்ப வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை —

எதிர்க்கட்சி முன்னணிக்குள் மக்கள்ஐக்கிய முன்னணி, நவசமாஜக் கட்சி ஆகியவற்றையும்சேர்த்துக் கொளள் முயற்சி நடப்பதாகக் கூறப்பட்டது. (உ)

விற்பனையாகிறது

முன்வினை - முயற்சி - திருவருள்

வைகாசி இதழ்

- சனி மாற்றமும் ஏழரைச் சனியனும்
- கள்ள வியாழன் கழுத்தை அறுப்பது உண்மையா?
- வீட்டை வாழ வைக்க.........
- விவாகம் செய்ய உகந்த காலம்
- கிரகணமும் இராகுவும்
- உங்கள் பிரச்சினைக்கு ஜோதியின் பதில் மாத இராசி பலன், பிரமோத ஆண்டுக்குரிய விரிவான இராசி பலனின் ஒரு பகுதி என்பன உட்பட மற்றும் பல.
- வித்தியா சாகர நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
- துளபகிரி சோதிடர்
- சைவப்புலவர் நா. விசுவலிங்கம்
- அகத்தியன்

ஆகியோரின் கைவண்ணங்கள்

உதயன் விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.

# போராளிகளின் தியாகம் தான் இன்றைய அமைதிக்குக் காரணம்!

## விளையாட்டு விழாவில் தளபதி கருணா உரை

மட்டக்களப்பு மே 31

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது விடுதலைப் போராட்டத்தில் இதுவரை ஆயிரத்து 400போராளிகளை இழந்துள்ளார்கள். அந்த போராளிகளின் தியாகம் தான் இன்று எம் மக்கள் அமைதியை அனுபவிக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி கருணா விளையாட்டுத்துறை அமைச்சின் மாவட்ட விளையாட்டு விழாவின் சிறப்பு விருந்தினராக [illegible] கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

இந்த விளையாட்டு விழா மட்டக்களப்பு வெபர் அரங்கில் கடந்த ஞாயிறு நடைபெற்றது.

தளபதிகருணா அங்குமேலும் கூறியதாவது;

'ஸ்ரீலங்கா அரசின் அண்மைக்காலப் போக்குகள் குறித்து நாம் அதிருப்தி அடைந்துள்ளோம். இருப்பினும் நாம்அமைதிக்குப் புறம்பானவர் எல்ல என்பதைக் எடுத்துக்காட்டவே பேச்சுவார்த்தைகளைத் தொடருகின்றோம்.

[illegible] விளையாட்டு விழாக்களில் எமது இளைஞர்களின் ஆர்வத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இதற்குக் காரணம் இன்று நிலவுகின்ற அமைதியான சூழ்நிலைதான். இந்த அமைதியை உருவாக்கித்தந்த போராளிகளை நாம் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ள வேண்டும்'' — என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஆர். யோகநாதனும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். (உ-ரி)

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

03-06-1990 ல் வளர்மதி முன்னேற்றக் கழகத்தால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

1 ஆம் பரிசு:- துவிச்சக்கரவண்டி [0108]
J. விஜயா, ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

2 ஆம் பரிசு:- மின்விசிறி [3019]
V.சந்திரசேகரம், கோண்டாவில் லேன், கோண்டாவில்.

3 ஆம் பரிசு:- சுவர்மணிக்கூடு [4791]
S. கிருபறாஜ், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

நிர்வாகம்,
வளர்மதி முன்னேற்றக் கழகம்
சம்பியன் லேன், கொக்குவில். [13198]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய No 1 நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

# உதயன்

04 - 06 - 1990 திங்கட்கிழமை

சிக்கன சலவைக்கு
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ பார் சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

கடந்த வருடத்தில் ஓரளவு திருந்திய போதிலும்

# வடக்கு-கிழக்கின் நிலைமையால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்பு

## மத்திய வங்கியின் பிந்திய அறிக்கை தகவல்

கொழும்பு, ஜூன் 4

கடந்த வருடம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொருளாதார நடவடிக்கைகள் முன்னேற்றம் காண்பதற்கான சிறு அறிகுறிகள், தென்பட்டன. எனினும் அங்கு நடந்த சிவில் குழப்பங்களால் நாட்டுப்பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் பெரும் தாக்கம் உண்டாயிற்று.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் 1989 ஆம் ஆண்டின் இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் நடந்த சிவில் சண்டைகளாலும் நாட்டின் உற்பத்தியும் விநியோகமும் பெருமளவில் பாதிக்கப்பட்டன —

மொத்தத்தில் இந்தக் குழப்பங்களால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி குன்றியது- எனவும் மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ சிவில் குழப்பங்களின் மத்தியிலும் நாட்டின் நிகர உள்ளக உற்பத்தி 2.3 சதவீதம் உயர்ந்தது. (1988 நிகர உள்ளக உற்பத்தி வளர்ச்சி 2.7 சத வீதமாகும்.)

★ சென்ற வருடத்தில் நிலவிய கடும் வரட்சியால் விவசாயத் துறை பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது.

★ பிரஸ்தாப ஆண்டில் அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தொலைத்தொடர்பு மின்சார சாதனங்கள் என்பன சேதப்படுத்தப்பட்டதால் மக்களின் வசதிகள் குன்றிப்போயின.

★ நாட்டின் நிகர தேசிய உற்பத்தி 1988ஆம் ஆண்டைவிட கடந்த வருடத்தில் 2.2 சதவீதம் உயர்ந்தது.

★ நிகர தேசிய உற்பத்தி வளர்ச்சியில் பொருள் உற்பத்தி மற்றும் சேவைகள் துறையே 69 சதவீதம் பங்களித்தது.

★ உணவுப் பொருள்கள், குளிர்பானங்கள், புகையிலைப் பொருள்கள் என்பனவற்றின் உற்பத்திக்கு அடுத்து, துணி மற்றும் ஆடைகள் உற்பத்தி, உலோக உற்பத்திகள் இரண்டாம் இடத்தைப் பிடித்தன.

1989 ஆம் ஆண்டில் நாட்டின் சனத்தொகை 1.3 சதவீதம் உயர்ந்தது. பதிவாளர் நாயகத்தின் தரவின் பிரகாரம் சென்ற வருடம் நாட்டின் சனத்தொகை ஒரு கோடியே அறுபத்தெட்டு லட்சமாகும்.

★ தனி ஆள் வருமானம் சென்ற வருடத்தில் 0.9 சதவீதத்தால் உயர்ந்தது.

★ கடந்த வருடத்தில் முதலீடு பெரும் வீழ்ச்சி கண்டது.

★ முதலீட்டுக்கு உதவும் விதத்தில் சேமிப்பும் இடம் பெறவில்லை.

★ கடந்த வருடத்தில் தேயிலை உற்பத்தி 9 சதவீதத்தாலும், றப்பர் உற்பத்தி 10 சதவீதத்தாலும் வீழ்ச்சி கண்டன. நெல் உற்பத்தியோ 17 சதவீதம் வீழ்ச்சி கண்டது. எனினும் தெங்கு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க விதத்தில் 28 சதவீதம் உயர்ந்தது.

★ மீன் உற்பத்தியும் 4 சதவீதம் கடந்த வருடத்தில் உயர்வாகக் காட்டியது.

★ 1989 ஆம் ஆண்டில் இலங்கை ரூபாவின் மதிப்பு முக்கிய உலக நாணயங்களை விட வெகுவாகக் குறைந்தது.

★ அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு காரணமாக அதற்கான செலவினம் 30 சதவீதம் அதிகரித்தது (இந்த வகையால் மொத்தம் 1,298 கோடியே 10 லட்சம் ரூபா அரசுக்குச் செலவானது)

★ 1989ஆம் ஆண்டு முடிந்த போது இலங்கையின் கடன் 27,230 கோடி 50 லட்சம் ரூபாவாகும். இது 1988 இல் இருந்ததை விட 21 சதவீதம் கூடுதலானதாகும்.

★ குறிப்பிட்ட ஆண்டில் நாட்டின் வெளிநாட்டுக்கடன் 15,474 கோடியே 40 லட்சம் ரூபாவாகும். இது அதற்கு முந்திய வருடத்தை விட 23 சதவீதம் கூடுதலானதாகும்.

குழப்ப நிலையின் மத்தியிலும், சேதங்கள் அழிவுகளின் மத்தியிலும் நாட்டின் பொருளாதார ஸ்திர நிலைமை நன்றாக இருந்ததாக மத்திய வங்கி அறிக்கை தெரிவிக்கிறது. (அ)

67 ஆவது பிறந்த நாள் நேற்று:

## கலைஞருக்கு பிரமுகர்கள் வாழ்த்துத் தெரிவிப்பு

தமிழக முதல்வர் திரு. முத்துவேலர் கருணாநிதியின் 67 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று குடியரசுத் துணைத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, மாநில ஆளுநர் திரு. குல்ஜித் சிங் பர்னாலா ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

சென்னை கலைவாணர் அரங்கில் பிறந்த நாளை முன்னிட்டு நடந்த வைபவத்தில முதல்வருக்கு, மத்திய நிதி அமைச்சர் திரு. மது தண்டவதே மற்றும் மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர்.

திராவிடக்கழக பொதுச் செயலாளர் திரு. வீரமணி மற்றும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள், வேறுகட்சிகளின் தலைவர்கள் ஆகியோரும் முதலமைச்சரை வாழ்த்தினர்.

கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு திராவிட முன்னேற்றக்கழகம் அமைத்த 67 பேருந்து நிழற்குடைகளை அசாம் மாநில முதல்வர் திரு. பிரசன்னகுமார் முகுந்தா திறந்து வைத்தார்.

### ● மூவர் தற்கொலை

பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட மனவிரக்தி காரணமாக 3 பேர் நேற்று யாழ். பகுதியில் தற்கொலை செய்து கொண்டனர்.

''அல்ஸர்'' நோயினால் ஏற்பட்ட உபாதை காரணமாக புத்தூரைச் சேர்ந்த சின்னக்குட்டி மகேஸ்வரி [வயது 51] என்ற பெண்மணி விஷம் குடித்தும்–

குடும்பத் தகராறு காரணமாக ஊரெழுவைச் சேர்ந்த நாகரத்தினம் தவராஜா என்பவர் தூக்குப் போட்டும்—

வேலை கிடைக்காத காரணத்தால் காரைநகரைச் சேர்ந்த க. ஜெகன்மோகன் [வயது 32] என்பவர் நஞ்சருந்தியும் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டது

## சிறுவன் ஏற்பினால் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

இரண்டு மாதங்களுக்கு முன்னர் குத்திய காரல் முள்ளினால் ஏற்பட்ட ஏற்புவலி காரணமாக சிறுவன் ஒருவன் மரணமானான்.

விசுவமடுவைச் சேர்ந்த இராமு ரவி என்ற 14 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

## கல்வி சுற்றுலா

உடுப்பிட்டி ''பேகொன்'' கல்வி நிலையத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும் ஆசிரியர்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் மயிலிட்டி இறங்குதுறை, கீரிமலை, கசூரினா பீச், யாழ். கோட்டை, நிலாவரை, உதயன் அலுவலகம் ஆகியவற்றுக்கு விஜயம்செய்தனர். (இ)

# பாம்புக் கடி மரணத்தை தடுக்க உடன் சிகிச்சை செய்வது அவசியம்

## ஆராய்ச்சிக் கட்டுரையில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

பாம்புக் கடிக்கு சுதேச வைத்தியம் செய்து நாட்பட்ட பின்னர் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டு வருவதை தவிர்த்து –

உடனேயே அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குக் கொண்டு வந்தால் –

பாம்புக் கடியால் உண்டாகும் மரணங்களைக் குறைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண மருத்துவக் கழகத்தின் எட்டாவது மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் கே. சிவகுமார் அளித்த அந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியில் தான் அதிகமான பாம்புக்கடி மரணங்கள் சம்பவிக்கின்றன.

★ பாம்புகடித்ததும் சுதேச வைத்தியத்தில்காலத்தைசெலவழியாது, நேரடியாக அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காகக் கொண்டுவர வேண்டும். இது குறித்து மக்களுக்கு போதியளவு பிரசித்தப்படுத்தி அறிவூட்ட வேண்டும்.

★ பாம்புக் கடியால் ஏற்படும் சுவாசப் பாரிசத்தை எவ்வளவு நேரகாலத்துடன் கண்டுபிடித்துச் சிகிச்சை செய்கிறோமோ அந்தளவுக்கு விரைவில் மரணத்தைத் தவிர்க்க முடியும்.

★ மாவட்ட வைத்தியசாலைகளுக்கு பாம்புக் கடிச் சிகிச்சைக்கு வேண்டிய சகல உபகரணங்களும் குறைவின்றி வழங்கப்பட வேண்டும். (அ)

# தொண்டர் ஆசிரியர் விவரம்: புலிகளால் கோரப்படுகிறது

யாழ், மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் விவரங்களை விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர் என்று அறியவருகிறது.

பிரஸ்தாப விவரங்கள் தொண்டர் ஆசிரியர்களிடமிருந்து, யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாதிரி செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க ஆவன செய்யும்படி அண்மையில் தொண்டர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் சிலர் விடுதலைப்புலிகளின் மாதிரிச் செயலகத்தில் பிரமுகர்கள் சிலரைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அடுத்தே விவரங்கள் கோரப்படுகின்றன.

இதன் முதல் கட்டமாக நல்லூர் தொகுதியில் வசிக்கும் சகல தொண்டர் ஆசிரியர்களும் நாளை செவ்வாய்க்கிழமை 5ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்வியங்காடு ஸ்ரார் பியூப்பிள் அக்கடமிக்கு வந்து விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

## அனலைதீவில்

அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய இரதோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதியும், தீர்த்தோற்சவம் 8 ஆம் திகதியும் நடைபெறும். (இ-7)

மக்கள் வங்கியில்

## கமிஷன் அடிப்படையில் இளைஞர்களுக்கு வேலை!

கொழும்பு, ஜூன் 4

மக்கள் வங்கி தனது வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு கமிஷன் அடிப்படையில் தொழில் வழங்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்து உள்ளது.

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவது அது பயன்படுத்தப்படும் முறையைக் கண்காணிப்பது கடனை அறவிடுவதுபோன்ற கடமைகளைச் செய்யும் பொறுப்பு இந்த இளைஞர்களிடம் ஒப்படைக்கப்படும்.

ஜனசக்தித் திட்டம் அமுலாகும் பிரதேச உதவி அரச அதிபர் பிரிவுகளில் முதலில் இவர்கள் நியமிக்கப்படுவர்.

ஆரம்பத்தில் 80 பேருக்கு நியமனம் வழங்கப்படும் ஐந்து திறமைச் சித்திகளுடன் ஜீ. சி. ஈ. சாதாரணப்பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

மாத அலவன்ஸாக ஐந்நூறு ரூபாவும் திருப்பி அறவிடப்படும் கடன் தொகையைப் பொறுத்து கமிஷனும் வழங்கப்படும்.

கடன் பெறுவதற்குத்தகுதியானவர்களை அடையாளங் காணுவதும் இவர்கள் கடமையாக இருக்கும்.

தெரிவு செய்யப்படும்இளைஞருக்கு வட்டியில்லாக் கடனாக மூவாயிரம் ரூபா வழங்கப்படும்.

அதனைப் பயன்படுத்தி கடமை புரிவதற்குத் தேவையான சைக்கிள் வாங்கக் கூடியதாயிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

உலகின் எல்லாப் பாகங்களிலும்

## ஐ.நா.உலக சுற்றாடல் தினம் நாளை சிறப்புற அனுஷ்டிப்பு

### யாழ். பிரிவு தலைவர் செய்தி

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஐக்கிய நாடுகள் உலக சுற்றாடல் தினம் நாளை 5 ஆம் திகதி உலகின் எல்லாப் பாகங்களிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருட கொண்டாட்டங்களில் ''சிறுவர்களும் சுற்றாடலும்'' என்பது மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சங்க தேசிய பணிப்பாளர் சபை உறுப்பினரும், யாழ். பிரிவு தலைவருமான கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் ஐ.நா. உலக சுற்றாடல் தினம் தொடர்பாக செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டம் (யூ. என். இ. பி.) இத்தினத்தை மெக்சிக்கோ நகரில் சிறப்பாக கொண்டாடுகின்றது. அத்துடன் சுற்றாடல் பாதுகாப்பிற்கும், அதனை அபிவிருத்தி செய்வதிலும் கணிசமான பங்களிப்புச் செய்த 500 ஸ்தாபனங்களும், தனிநபர்களும் நாளை மெக்சிக்கோ நகரில் ஐக்கிய நாடுகளினால் கௌரவிக்கப்படுகின்றனர்.

இலங்கையிலிருந்தும் இக்கௌரவத்தை ஓர் பத்திரிகையாளர் பெறுவது ஒரு சிறப்பம்சமாகும்.

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டம், அரசாங்கங்களையும், அரச சார்பற்ற ஸ்தாபனங்களையும் மற்றும் சமூக ஸ்தாபனங்கள், குழுக்கள் ஆகியனவற்றையும் இத்தினத்தை சிறப்புற அனுஷ்டித்து, சுற்றாடல் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளது. –என்று உள்ளது. (ஒ)

## போலிப் பிறப்புச் சான்றிதழ் தயாரிக்கும் குழு கைது

போலிப் பிறப்புச் சான்றிதழ் தயாரிக்கும் குழுஒன்றை கொழும்பு புலனாய்வுப் பொலீஸார் கைது செய்தனர்.

இக்குழுவைச் சேர்ந்த ஐந்து நபர்கள் இப்போது புலனாய்வுப் பொலீஸாரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பதிவாளர் நாயகத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து மாவட்ட அலுவலகம் ஒன்றுக்கு அனுப்பப்பட்ட வெற்று பிறப்புச்சான்றிதழ் புத்தகம் ஒன்றுடன் கதிரேசன் வீதியில் உள்ள நபர் ஒருவர் அண்மையில் கைதானார்.

அதனைத் தொடர்ந்தே இக்குழு ... மானது. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. மா. சுப்பிரமணியம்

[கிளாக்கர்]

கந்தரோடையைச் சேர்ந்த மா. சுப்பிரமணியம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, வரதராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் (ரெயில்வே கார்ட்), காலஞ்சென்ற விஜயானந்தன் (மாவட்ட செயலாளர், கம்யூனிஸ்ட் கட்சி) தேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை மயானத்தில் இன்று மாலை 5 மணியளவில் தகனம் செய்யப்படும்.

கந்தரோடை.

தகவல்:
குடும்பத்தினர்.

(13200)

### திரு. செ. பொன்னம்பலம்

நீர்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட நாவலப்பிட்டி செ. பொன்னம்பலம் அவர்கள் 1-6-90இல் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-6-90 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
பொ. சோதிலிங்கம் [மகன்]

''சர்வசித்தி'',
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[13191]

### திரு. மா. நடராசா

சுழிபுரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு நடராசா [இளைப்பாறிய புகையிரத பாதுகாவலர்] சனியன்று காலமாகி விட்டார். இவர் ராசமணியின் அன்புக் கணவரும் யோகராசா [முல்லைத்தீவு, விவசாய இலாகா], சந்திரராசா [ஜேர்மனி], அருள்ராசா [ஜேர்மனி] தேவராசா [இத்தாலி], நேசராசா [நோர்வே], நவமலர், மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அழகுராசா குணபாக்கியம், விமலா, கலைவாணி, தேவி, நந்தினி, பபா ஆகியோரின் அன்பு மாமனாரும், வரதராசா, ரகுநாதன், மலர் ஆகியோரின் பெரியதகப்பனாரும் (காலம் சென்ற கதிரவேலு [சன்னாசி], செல்லையா, பாக்கியம், நல்லையா, இராசம்மா, வேலுப்பிள்ளை, சின்னப்பிள்ளை, செல்லப்பா, அன்னமுத்து,) கந்தையா, சிவக்கொழுந்து பொன்னையா, செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகமுத்து நாகம்மாவின் அன்பு மருமகனும், கிருஷா, கிருஷாந்தன், துஷயந்தன், பிரதீபன், சுதர்சன், சுயந்தன், ரஜிபன், சோபிகா, குகராஜ் [ஜேர்மனி], அன்புப் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் புகையிரத உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தருகிறோம்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

சுழிபுரம் தெற்கு,
சுழிபுரம்

[13190]

## காணவில்லை

27-05-1990 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து மாமயிலை நிறமுடைய 15 மாத கன்றிப் பசுவைக் காணவில்லை. நெற்றியில் வெள்ளை நிற அரச இலை அடையாளமும், கால்களில் வெள்ளை நிறமும் உள்ளது. தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் தரப்படும்.

தீபா றேடேர்ஸ்,
ஆடியபாதம் வீதி, நல்லூர் மார்க்கெட்,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். [13197]

எமது நேற்றைய வெளியீடு:

✶ கார்த்திக் ✶ கனகா ✶ S.S. சந்திரனின்
பெரிய வீட்டு பண்ணைக்காரன்
(ஒறிஜினல்)

'வீடியோ விமல்'
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். [13199]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org